விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 01 சனிக்கிழமை (17.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210

## மனைவி வைத்தியசாலையில் கணவன் வீட்டில் சடலமாக மீட்பு

**முறிகண்டியில் சம்பவம்**



(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முறிகண்டி, செல்வபுரம் பகுதியிலுள்ள வீடு ஒன் றில் இருந்து ஆணொ 19

## 2 வாரங்களில் நாட்டில் 'டெல்டா' தொற்றாளர்கள் அதிகரிக்கலாம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை


(கொழும்பு)

நாட்டில் "டெல்டா" வகை கொரோனாத் தொற்றுக்குள்ளா வோர் எண்ணிக்கை அடுத்த 2 வாரங்களில் அதிகரிக்க வாய்ப் புள்ளதாக அரச மருத்துவ அதி காரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழுவின் உறுப்பினர் வைத்தி யர் ருவான் ஜெயசூரிய 19

## நாட்டில் 'டெல்டா' பரவல் தீவிரம்

# கட்டுப்பாடுகளை இறுக்கமாக்க ஆராய்வு



(கொழும்பு)

**நாட்டில் டெல்டா வகை திரிபு வைரஸ் தொற்று நாட்டின் முக்கியமான இடங்களில் பலரிடம் அடையாளம் காணப்பட்டிருக் கும் நிலையில் தளர்த்தப்பட்டுள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீளவும் இறுக்கமாக அமுல்படுத்த அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.**

டெல்டா திரிபு வடக்கு மாகா ணத்திற்கும் பரவியுள்ளதால் அதனை மேலும் பரவாமல் தடுக் கும் சுகாதார ஏற்பாடுகளை சுகா தார தரப்பு முன்னெடுத் துள்ளது. 19

## கொரோனா +1,446

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுடன் மேலும் 1,446 பேர் நேற்று அடையாளம் காணப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

சுகாதார அமைச் 19

## கொரோனா 41 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 41 கோவிட்-19 மரணங்கள் பதி வாகியுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. 19

## பருத்தித்துறை வைத்திய அதிகாரி பிரிவை முழுமையாக முடக்க நடவடிக்கை

### நேற்றும் 21 தொற்றாளர்கள் அடையாளம்

(கரணவாய்)

பருத்தித்துறை வைத்திய அதிகாரி பிரிவை முழுமையா முடக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

குறித்த பகுதியில் எழுமாற் றாக மற்றும் ஏற்கெனவே தொற் றாளர்களுடன் தொடர்புடைய வர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 21 தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 19

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 மாத கைக்குழந்தை கொரோனாவால் மரணம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 மாதக் கைக்குழந்தை ஒன்று உயிரிழந்த நிலை யில் கோவிட் - 19 19

| கொரோனா | |
|---|---|
| வடக்கு | - 55 |
| யாழ்ப்பாணம் | - 43 |
| கிளிநொச்சி | - 04 |
| முல்லைத்தீவு | - 05 |
| வவுனியா | - 03 |

## தலைமன்னார் கடற்பரப்பில் சிதைவடைந்த நிலையில் சடலம் மீட்பு

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் 5ஆவது தீடை பகுதி யில் சிதைவடைந்த 19

## அதிகரித்த கோவிட் தொற்றாளர்கள் மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்துக்கு மீண்டும் தடை

(கொழும்பு)

இன்று ஜூலை 17 முதல் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை மாகாணங்களுக்கு இடை யிலான தொடருந்து மற்றும் பேருந்து சேவைகளை நிறுத்தி வைக்க கோவிட் தடுப்பு தேசியக் குழு முடிவு செய்துள்ள தாக போக்குவரத்து 19

## வடக்கு, கிழக்கில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

(05ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அடக்குமுறைக்கு எதிராக யாழில் கவனயீர்ப்பு



(03ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நகர்ப் பகுதியில் 6 தொற்றாளர்கள் நேற்று தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் மேலும் 7 வர்த்தகர்களுக்கு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொரளை வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றால் 10 குழந்தைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், இதுவரை 10 குழந்தைகள், கொழும்பு பொரளை சீமாட்டி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனரென வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், 490 குழந்தைகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழந்தைகளுள் எந்தவொரு குழந்தைக்கும் வைத்தியசாலைக்குள் வைத்து கொரோனா தொற்றவில்லை என்றும் இவர்கள் அனைவருக்கும் சமூகத்திலிருந்தே தொற்றியுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-03)

# போதைக்கு அடிமையான இரு சகோதரர்களை

## ஒரு ஆண்டு மறுவாழ்வுக்கு அனுப்ப யாழ். நீதிமன்ற நீதவான் கட்டளை

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருளுக்கு அடிமையாகிய சகோதரர்கள் இருவரை ஒரு ஆண்டு மறுவாழ்வுக்கு அனுப்பி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் கட்டளையிட்டார்.

பெற்றோர் மன்றில் முன்னிலையாக பிள்ளைகளை சீர்திருத்தத்துக்கு அனுப்ப விண்ணப்பம் செய்தமைக்கு அமைவாக இந்தக் கட்டளையை நீதிமன்றம் நேற்று வழங்கியது.

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 19 வயதுடைய சகோதரர்கள்போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களின் பெற்றோர் சட்டத்தரணி க.நிசாந்தன் ஊடாக மன்றில் முன்னிலையாகி தமது விண்ணப்பத்தை மன்றுக்கு முன்வைத்தனர்.

"சந்தேக நபர்கள் இருவரும் நீண்டகாலமாக போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். அவர்களை நல்லொழுக்கத்துக்கு மாற்ற பெற்றோர் பெரும் முயற்சிகள் எடுத்தும் பயனற்றுப் போயின.

சகோதரர்களான இருவரையும் சீர்திருத்தி சமூகத்தில் வாழ நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பெற்றோர் சார்பில் சட்டத்தரணி க.நிசாந்தன் விண்ணப்பம் செய்தார்.

சந்தேக நபர்களின் பெற்றோர் சார்பிலான விண்ணப்பம் மற்றும் சந்தேக நபர்கள் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டமையை ஆராய்ந்த நீதவான் ஏ. பீற்றர் போல், இருவருக்கும் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

சிறைத் தண்டனைக் காலமான ஒரு ஆண்டுக்கு சகோதரர்கள் இருவரில் ஒருவரை கந்தக்காடு மறுவாழ்வு நிலையத்துக்கும் மற்றையவரை பல்லேகல மறுவாழ்வு நிலையத்துக்கும் அனுப்பி மறுவாழ்வு வழங்க கட்டளையிட்டார். (ம-03,33)


## கண்ணீர் அஞ்சலி



யாழ் . பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையின் முன்னாள் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி **இராசேந்திரா சுரேந்திரகுமாரன்** அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி

**இரத்தினேஸ்வரி இராசேந்திரா**

அவர்கள் நேற்று முன்தினம் (15.07.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தமையினை இட்டு மீளாத்துயர் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது திணைக்களம் சார்பான ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7252)

சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.



## பகிரங்க ஏல விற்பனை

வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனைக்குத் தீர்மானிக்கப்பட்ட பொருட்கள் 29/07/2021 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 10.00 மணிக்கு பாடசாலையில் ஏல விற்பனை நடைபெறவுள்ளது. பொருட்களின் விபரங்களை பாடசாலை நேரத்தில் அதிபர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-2365)

அதிபர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## கண்ணீர் அஞ்சலி



யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் இயக்குனர் சபைத் தலைவர் Dr. **இ.சுரேந்திரகுமாரன்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

**திருமதி இரத்தினேஸ்வரி இராசேந்திரா**

அவர்கள் நேற்று முன்தினம் (15.07.2021) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்
யாழ். சமூக செயற்பாட்டு மையம் - யாழ்ப்பாணம்.

(C-2366)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
## 42, கள்ளி ஒழுங்கை, வட்டாரம் - 07

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் 07 கள்ளி ஒழுங்கையிலுள்ள இல.42 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் திருமதி அமிர்தலிங்கம் மகேஸ்வரி என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாக ¼ பங்கினை கனகசபை அமிர்தலிங்கம் மகள் கோகிலாம்பாள் பிரசித்த நொத்தாரிசு சி.கந்தசாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4724/10.03.1963ஆம் இலக்க உறுதியால் கனகசபை அமிர்தலிங்கம் மகள் லீலாவதி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை நிந்தப்படுத்தியும் ஒரு பகுதியினை சொரியலாகவும் கனகசபை அமிர்தலிங்கம் மகள் கோகிலாம்பாள் (அம்பலவாணர் பாலசுப்பிரமணியம் பெண் கோகிலாம்பாள்) பிரசித்த நொத்தாரிசு ச.வ.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9692/09.02.1970ஆம் இலக்க உறுதியால் அமிர்தலிங்கம் சிவசுப்பிரமணியம் ஆகியவரிடமிருந்து குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த அம்பலவாணர் பாலசுப்பிரமணியம் பெண் கோகிலாம்பாள் காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான சிவராசா மயூரதன், சிவராசா மணிவண்ணன் ஆகியவர்களுக்கு மாதாவழி முதுசமாக சென்றடைந்தது.

குறித்த ஆதனத்தில் நிந்தப்படுத்தப்பட்ட ஒரு பகுதியினை குறித்த சிவராசா மணிவண்ணன் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10545/06.03.2010ஆம் இலக்க உறுதியால் தனது சகோதரரான சிவராசா மயூரதன் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த ஆதனத்தில் நிந்தப்படுத்தப்பட்ட மற்றைய பகுதியினை குறித்த சிவராசா மயூரதன் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10546/06.03.2010ஆம் இலக்க உறுதியால் தனது சகோதரரான சிவராசா மணிவண்ணன் ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த ஆதனங்களினை விநாசிதம்பி நந்தகுமாரும் பெண் விஜயரதியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2071/29.05.2020 ஆம் இலக்க உறுதியால் சிவராசா மயூரதனும் , சிவராசா மணிவண்ணனும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

குறித்த விநாசிதம்பி நந்தகுமாரும் பெண் விஜயரதியும் ஆகியவர்கள் குறித்த 9692 ஆம் இலக்க உறுதியில் காலஞ்சென்ற அம்பலவாணர் பாலசுப்பிரமணியம் பெண் கோகிலாம்பாள் பெயரில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதியில் குறித்த ஆதனத்தில் சொரியலாய் 1 3/4 மற்றும் சொரியலாய் 1 3/4 ம் சேர்த்து நில.பர.இலா 3 1/2 என நிந்தப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறித்த 10545, 10546 மற்றும் 2071 ஆம் இலக்க உறுதிகளில் முறையே சொரியலாய் 1 1/2, சொரியலாய் 1 1/2 ம் சேர்த்து நில.பர.இலா 3 என தவறாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் தவறினை நிவர்த்தி செய்து குறித்த முழு நில.பர.இலா 3 1/2 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தின் ஆட்சி தமக்கு வந்தது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் 2335/26.03.2021 ஆம் இலக்கத்தில் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

சபாரத்தினம் பெண் லலிதாராணியும், செல்வக்குமார் பெண் கலைச்செல்வியும், குறித்த விநாசிதம்பி நந்தகுமாரும் பெண் விஜயரதியும் ஆகியவர்களில் 1 ஆம், 2ஆம் பேர் குறித்த 9692 ஆம் இலக்க சீதன உறுதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவற்றினையும் நிவர்த்தி செய்து குறித்த ஆதனத்தின் ஆட்சியினை ஒப்படைப்பதாகவும், தமக்குரிய உரித்துப்பங்கை கைதுறப்பதாகவும், குறித்த ஆதனத்தில் மேற்படி உறுதிகளின் வாயிலான பங்குகளை விரித்தும் தெளிவுபடுத்தியும் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் 2337/29.03.2021 ஆம் இலக்கத்தில் உரிமைப் பங்கினை அழித்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

குறித்த விநாசிதம்பி நந்தகுமாரும் பெண் விஜயரதியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விநாசிதம்பி நந்தகுமாரும் பெண் விஜயரதியும் ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2367)

தவிசாளர்/ செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறை தென்னிலங்கைக்கும் பரவியது

# எனவே சிங்கள மக்களின் அழிவும் நிச்சயம்

## கஜேந்திரகுமார் எச்சரிக்கை





**(கொழும்பு)**

**அடக்கு முறை ஒரு தரப்பிற்கு நடந்தால் அது மறுதரப்பிற்கும் பரவும்.இதனை சிங்கள பௌத்த மக்கள் விளங்கிக் கொள்ளாமல் இருக்கின்ற வரைக்கும் அவர்களுடைய அழிவும் நிச்சயம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரித்துள்ளார்.**

யாழ்ப்பாண பேருந்து நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.குறித்த போராட்டமானது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோரின் சட்டவிரோத கைது, கல்வியில் இராணுவ மயமாக்கல், கல்வியை தனியார் மயப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ஜனாதிபதி செயலகம் முன் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

இராணுவ ஆட்சியின் ஊடாக சிவில் நிர்வாகத்தை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. இலவச கல்விக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் மகஜரும் கையளிக்கப்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஆசிரிய சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட சிவில் அமைப்பினரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி 17 தொழிற் சங்கத்தினர் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஆசிரியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் விரைவில் தீர்வை பெற்றுத் தர வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

(நி-5)

## கொவிட் தடுப்பூசி அனைவருக்கும் தேவையற்றது

### பேராசிரியர் திஸ்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இருக்கும் அனைவருக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றுவது அநாவசிய செலவாகும்.

மாறாக 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு வருபவர் களுக்கு மாத்திரம் வழங் குவது போதுமாகும் என வைரஸ் தொடர்பான நிபுணரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றுவதற்கு அரசாங்கம் எடுத் திருக்கும் நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் .(நி-5)

## நடமாடும் தடுப்பூசி சேவையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

நடமாடும் தடுப்பூசி வழங்கும் சேவையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுகாதார பிரிவினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஊனமுற்றவர்கள் மற்றும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வீடுகளில் இருந்து வெளியேற முடியாதவர்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டு வரும் நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-5)

**பனைமரங்கள் விற்பனைக்கு**

**அனுமதிபெற்ற 5 பனைமரங்கள் விற்பனைக்குண்டு.**

தொடர்பு:வைத்தி.மோசஸ் திரவியம்
ஆடியபாதம் வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை
(பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில்
உள்ள பூபதி வெதுப்பகத்திற்கு அருகில்) (7245)

## இலவசக் கல்வியை இல்லாதொழிக்க மறைமுக நடவடிக்கைகள் ஆரம்பம்

### அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள இலவச கல்வி முறைமையை இல்லாதொழித்து, தனியார் கல்வி முறைமையை முழுமையாக ஸ்தாபிப்பதற்கான மறைமுக நடவடிக் கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் மாலபே சைட்டம் விவகாரத்தில் எம்மிடம் தோல்வி யடைந்து வீட்டுக்கு சென்றது போலவே, இந்த அரசாங்கத்தையும் வீட்டுக்கு அனுப்புவோம் என அனைத்து பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரி வித்தார்.

கொத்தலாவல தனியார் பல்கலைக் கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட செயற்பாடுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளு க்கு எதிராகவும் குறித்த சட்ட மூலத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தெளிவு படுத்தும் ஊடக சந்திப்பொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன் றியம் ஏற்பாடு செய்திருந்தது. அதன் போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.(நி-5)

**80 ஆம் ஆண்டு அகவை நிறைவு**




**தர்மசக்தி அம்மா**
**(இராசாத்தி)**
**பாலர் பாடசாலை**
**ஆசிரியை, அளவெட்டி**

**அளவெட்டி வடக்கு மாவிலங்கையில் வசிக்கும் நான் படுக்கை நோயாளி ஆகி பராமரிப்பார் அற்று பெருந்துயரம் அடையாமல் நோய் நொடியின்றி வாழ வேண்டுமென பரமசிவனையும் பராசக்தியையும் வேண்டுகின்றேன்.**

(7218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணித் தலைமையில் மாற்றம்; தேறுமா இலங்கை



பயிற்சியின்போது இலங்கையின் ஷனாகா

இந்தியாவுக்கு எதிரான தொடரில் இலங்கை அணிக்கு புதிய தலைவராக தசுன் ஷனகா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சென்ற இந்திய அணி மூன்று ஒருநாள், மூன்று 'ரி20' போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது. அனைத்து போட்டிகளும் கொழும்பில் நடக்கவுள்ளன.

முதல் ஒருநாள் போட்டி நாளை நடக்கவுள்ளது. இதற்கான இலங்கை அணி நேற்று தான் அறிவிக்கப்பட்டது. 25 பேர் கொண்ட இந்த அணிக்கு தலைவராக தசுன் ஷனகா, துணைத் தலைவராக தனஞ்செய டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் முதல் கேப்டனாக இருந்த குசல் பெரேரா தலைமையில் பங்கேற்ற அனைத்து ஒருநாள், 'ரி20' தொடரிலும் இலங்கை அணி தோற்றது. தவிர வலது தோள்பட்டை காயம் காரணமாக இவர் 6 வாரங்கள் விலகியதால், ஷனகா புதிய தலைவர் ஆனார். கடந்த 5 ஆண்டுகளில் இலங்கை அணி நியமித்த 10ஆவது அணித் தலைவர்.

இங்கிலாந்தில் கொரோனா விதிகளை மீறியதாக விக்கெட் கீப்பர் டிக்வெல, குசல் மெண்டிஸ், குணதிலக 'சஸ் பெண்ட்' செய்யப்பட்டனர்.

இதனால் இளம் விக்கெட் கீப்பர்கள் மினோத் பானுகா, லகிரு உதாரா சேர்க்கப்பட்டனர். தவிர அவிஷ்கா பெர்னாண்டோ, பானுகா, ஹசரங்க, சண்டகன், அகிலா தனஞ்செய, ஜெய விக்ரம, லகிரு குமார, இசுரு உதானா உட்பட 25 பேர் இடம் பெற்றுள்ளனர்.

# பங்களாதேஷ் இலகு வெற்றி

## சதமடித்து அசத்தினார் லிட்டன் தாஸ்

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் லிட்டன் தாஸ் சதம் விளாச பங்களாதேஷ் அணி 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிம்பாப்வே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

ஹராரேயில் நேற்று முதல் போட்டி நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற சிம் பாப்வே அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

பங்களாதேஷ் அணிக்கு அணித் தலைவர் தமிம் இக்பால் (0) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய லிட்டன் தாஸ் (102) சதம் விளாசினார். சகிப் அல் ஹசன் (19), மொஹமட் மிதுன் (19) நிலைக்கவில்லை. மகமதுல்லா (33), ஆபிப் ஹொசைன் (45) ஓரளவு கைகொடுக்க, பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய சிம்பாப்வே அணிக்கு ரெஜிஸ் சகப்வா (54) அரைசதம் கடந்து ஆறுதல் கொடுத்தார். அணித் தலைவர் பிரண்டன் ரெய்லர் (24), ரியான் பர்ல் (6) உள்ளிட்ட மற்றவர்கள் ஏமாற்ற, சிம்பாப்வே அணி 28.5 ஓவர்களில் 121 ஓட்டங் களுக்கு சுருண்டு 155 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் வங்கதேசம் சார்பில் சகிப் அல் ஹசன் 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் பங்களாதேஷ் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.



சதமடித்து அணியை தூக்கி நிறுத்திய லிட்டன் தாஸின் அதிரடிகளில் ஒன்று..

## ரோக்கியோ ஒலிம்பிக்

# கெர்பர் விலகல்



ரோக்கியோ ஒலிம்பிக் டென்னிஸ் போட்டியில் இருந்து ஜேர்மனியின் கெர்பர் விலகினார்.

ஜேர்மனி டென்னிஸ் வீராங்கனை கெர்பர் (வயது-33). மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள இவர், சமீபத்தில் லண்டனில் நடந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் தொடரில் அரையிறுதி வரை சென்றிருந்தார்.

இந்நிலையில் உடல் சோர்வு காரணமாக ஜப்பானில் வரும் ஜூலை 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலகினார்.

லண்டன் (2012) ஒலிம்பிக்கில் முதன்முறையாக களமிறங்கிய இவர், ரியோ ஒலிம்பிக் (2016) ஒற்றையரில் வெள்ளி வென்றிருந்தார்.

இதுகுறித்து கெர்பர் கூறுகையில்,

"லண்டன், ரியோ ஒலிம்பிக்கில் ஜேர்மனிக்காக களமிறங்கியது என்றும் மறக்க முடியாது.

தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்றதால் சிறிது ஓய்வு தேவைப்படுகிறது. இதனால் ரோக்கியோ ஒலிம்பிக்கில் இருந்து விலக வேண்டியதாயிற்று.

இது கடினமான முடிவு. எனக்கு ஆதரவு அளித்து வரும் அனைவருக்கும் நன்றி. ஜேர்மனி நட்சத்திரங்கள் பதக்கம் வென்று சாதிக்க வாழ்த்துகிறேன்," என்றார்.

ஏற்கனவே நடால் (ஸ்பெயின்), பெடரர் (சுவிட்சர்லாந்து), செரினா (அமெரிக்கா), சிமோனா ஹலெப் (ருமேனியா) உள்ளிட்டோர் ரோக்கியோ ஒலிம்பிக்கில் இருந்து விலகினர்.

# அஸ்வின் ஆறு விக்கெட்

## கவுன்டி போட்டியில் கலக்கல்

கவுன்டி போட்டியில் சுழலில் அசத்திய அஷ்வின் 6 விக்கெட் வீழ்த்தினார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது.

இதற்குத் தயாராகும் வகையில் இந்திய அணி சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின், கவுன்டி தொடரில் சர்ரே அணிக்காக பங்கேற்கிறார்.

ஓவல் மைதானத்தில் நடந்த இப்போட்டியில் சர்ரே, சமர்செட் அணிகள் மோதின.

முதல் இன்னிங்ஸில் சமர்செட் அணி 429 ஓட்டங்களைக் குவித்தது. அஷ்வின் 43 ஓவர்களில் 99 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட் மட்டும் வீழ்த்தினார்.

மூன்றாவது நாள் முடிவில் சர்ரே அணி முதல் இன்னிங்சில் 239/8 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நான்காவதும் இறுதியுமான நாளாட்டத்தில் சர்ரே அணி 240 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அடுத்து 189 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சமர்செட் அணிக்கு, இம்முறை அஷ்வின் 'வில்லனாக' அமைந்தார்.

ஆடுகளத்தில் பந்துகள் நன்றாக 'பவுன் சர்' ஆக, அஷ் வின் சுழ லில் ஸ்ரீபன் (7), ரொம் (3), அணித் தலைவர் ஜேம்ஸ் (14) சிக்கினர்.

அடுத்து வந்த ஜோர்ஜை (12) போல் டாக்கிய அஷ்வின், வான் டெர் மெர்வி (7), பென் கிரீனையும் (3) வெளியேற்றினார். சமர்செட் அணி இரண்டாவது இன்னிங்சில் 69 ஓட்டங்களுக்கு சுருண்டது.

சுழலில் மிரட்டிய அஸ்வின் 27 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். ஒட்டு மொத்தமாக இரு இன்னிங்ஸிலுமாக சேர்த்து 58 ஓவர்கள் பந்துவீசி, 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



சமர்செட் அணியுடனான ஆட்டத்தின்போது அஸ்வின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன், லஞ்சீற்றுக்கு தடை

# மீறினால் ஒரு லட்சம் அபராதம்

## சுற்றாடல் அமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு)**

**லஞ்சீற் மற்றும் பொலித்தீன்களை உற்பத்தி செய்வதற்கும், விநியோகிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்படவுள்ள நிலையில், அதனை மீறுபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் நாட்டில் சில வகை பொலித்தீன் மற்றும் லஞ்சீற் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத லஞ்ச் சீற்களையும் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

# மினி சூறாவளியினால் 30 வீடுகள் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகனேரி குடாமுனைக்கல் கிராமத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை வீசிய மினி சூறாவளியினால் முப்பது வீடுகள் சேதமடைந்துள்ளதாக கிரான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

வீட்டு கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன், வீட்டில் உள்ள பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. (நி-5)

# 18 வயதிற்கு மேற்பட்டோருக்கு கட்டாய இராணுவப் பயிற்சி

## சரத் வீரசேகர மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாயம் இராணுவப் பயிற்சி வழங்கப்பட வேண்டுமென, ஸ்ரீலங்கா பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பாணந்துறை - அலுபோ முல்ல மற்றும் ஹிரன பிரதே சங்களில் அமைக்கப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலையங்களைத் திறந்து வைத்து உரையாற்றுகையில், அமைச்சர் சரத் வீரசேகர இந்த விடயத்தை தெரிவித்தார்.

கொள்ளையர்கள், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள், பெண்களை துஷ் பிர யோகத்திற்கு உட்படுத்துவோர், பாதாள உலகக்குழுவினர், போதைப் பொருள் கடத்து பவர்கள் போன்றோர் இருக்கும் வரை அச்சமும், சந்தேகமும் இல்லாமல் இந்த சமுதாயத் திலே வாழ முடியாது. ஆகவே அவற்றை முதலில் ஒழிக்க வேண்டும்.

அப்படி ஒழித்து மக்கள் நிம்மதியாக, அச்சமின்றி வாழ கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே எமது நோக்கம்.

18 வயதிற்கு மேல் அனை வருக்கும் ஆயுதப்பயிற்சி வழங்க வேண்டும் என நான் பாராளுமன்றத்தில் கூறிய போது என்னை கேலி செய் தார்கள்.

இராணுவ பயிற்சி என்பது எல்லோரும் நினைப்பதை போல் இராணுவ வீரராகும் செயற்பாடு அல்ல. 18 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு இராணுவ பயிற்சி வழங்குவதற்கு சிறந்த இடம் இராணுவ முகாம்களே. அங்குதான் ஒழுக்கமும், அனைத்து வசதிகளும் காணப்படுகின்றது. அதனால் தான் அங்கே பயிற்சியை வழங்க தீர்மானித்தோம். தலைமைத்துவ பண்பையும், ஆளுமை திறனையும் வளர்க்கும் முக மாக 18 வயதிற்கு மேற்பட்ட அனை வருக்கும், இராணுவ பயிற் சியை வழங் கினால் நிச்சய மாக ஒரு சிறந்த சமுதா யத்தை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார். (நி-5)

# வடக்கு கிழக்கில் 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

# நாமல் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகா ணங்களை சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் இரண்டு மாதக் காலப்பகுதிக்குள் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப்பதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை விரைவுபடுத்து வது தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி இவ்விசேட திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார். அதற்கமைய வடக்கு- கிழ க்கு மாகாணங்களை சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனை வருக்கும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கொரோனா தடுப்பூசிகளை பெற் றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (நி-5)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**மனவளக்கலை யோகப் பயிற்சிகள்**
**மீண்டும் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் முழுமைநல வாழ்விற்கான எளியமுறை குண்டலினி யோகப் பயிற்சிகளாகிய

- பொதுமக்கள் தங்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக்கொண்டு தற்கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழ்வதற்கு தேவையான உடல் ரீதியான பயிற்சிகளான உடற்பயிற்சிகள்
- உறவினர்கள், நண்பர்களுக்கிடையே நட்பு நலத்தைப் பேணுவதற்கு அவசியமான மனவளப் பயிற்சிகளான எளியமுறை தியானப் பயிற்சிகள்
- உயிர்ச்சக்தியை விருத்தி செய்து நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கான காயகல்பப் பயிற்சிகள்

போன்றவற்றை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்: 17.07.2021 (சனிக்கிழமை)**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரைக்கும்**
**பயிற்சிகளை வழங்குபவர்: துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்**

குறிப்பு: பயிற்சியானது மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிற்சியாளர்களுடன் கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக நடைபெறும்.

**தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண்வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309** (C-2363)


# குழந்தை பிறப்பு விகிதம் பாரிய அளவில் வீழ்ச்சி

(கொழும்பு)

கொவிட் தொற்று காரணமாக இலங்கையில் குழந்தை பிறப்பு விகிதம் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடு காரணமாக திருமண வைபவங்கள் நடக்காத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் வருடம் ஒன்றிற்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தை பிறப்புக்கள் நாட்டில் பதிவாவதாகவும் தற்போது குழந்தைகள் பிறக்கும் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)


**துயர் பகிர்தலும் நன்றி நவிலலும்**

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 22 ❖ 11 ❖ 1937 |  | 19 ❖ 06 ❖ 2021 |

**வேலுப்பிள்ளை குணசிங்கம்**
(ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் கரவெட்டி மேற்கு, உடையாப்பா வளவினை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தருமான வேலுப்பிள்ளை குணசிங்கம் அவர்கள் தனது 84 ஆவது வயதில் 19.06.2021 சனிக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் மறைந்த வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் புத்திரரும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற விசாலாட்சி, புவனேஸ்வரி, சிவபாக்கியம் மற்றும் தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஜெயந்தன் (அவுஸ்திரேலியா), மிகுந்தன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), துஷ்யந்தன் (அவுஸ்திரேலியா), சுகந்தன் (கனடா) மற்றும் குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராதா (அவுஸ்திரேலியா), துஷ்யந்தி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கவிதா (அவுஸ்திரேலியா), மஞ்சுளா (கனடா), இரகுநாதன் (சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிந்துஜா, ஷோபனா, கிஷாந்த், மிதுறிகா, துமிலன், வக்ஷலன், விதுஷா, கீரன், வித்தகி, லசானி, மிதுஷா மற்றும் அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 19.06.2021 சனிக்கிழமை கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடியில் அமைந்த அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கரவெட்டி சோனப்பு மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

அன்னார் சுகவீனமுற்றிருந்த காலங்களில் அவருக்கு வைத்தியம் செய்த அனைத்து மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அன்னாரின் பிரிவு நிகழ்வில் பங்கெடுத்து செய்திகள் அனுப்பியும் தொலைபேசியில் உரையாடியும் துயர்பகின்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் இறுதி யாத்திரைக்கு சிறிய எண்ணிக்கையான உறவுகளே அனுமதிக்கப்பட்டமையாலும் அவரின் இன்றைய அந்தியேட்டி நிகழ்விற்கும் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டியிருப்பதாலும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். (7243)

கரவெட்டி மத்தி வீரபத்திரர் கோவிலடி — குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்தங்கிய நிலையிலுள்ள மக்களை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டும்

(யாழ்ப்பாணம்)

**கிராமங்களில் நலிவுற்ற நிலையில் இருக்கும் மக்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திறன் விருத்தி மையக் கட்டடம் ஊடாக இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் திறனை விருத்தி செய்து அதனூடாக அவர்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும். இவ்வாறான சிறந்த திட்டங்கள் வெற்றியடைய கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.பிரதேச செயலக திறன் விருத்தி உத்தியோகத்தர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

திறன் விருத்தி மையத்தில் பயிற்சி நெறிகளை மேற்கொள்ளத் தேவையான நிதியை பெற்றுக் கொடுக்க பிரதேச செயலகம் தயாராக உள்ளது. இளைஞர், யுவதிகள் திறன்களை விருத்தி செய்யும் அதேவேளையில் அந்தத் திறன்களைப் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தற்போது கொவிட் சூழ்நிலை காரணமாக ஒன்றரை வருடகாலமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இணையம் ஊடாக மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

அவ்வாறு இணைய வழி மூலம் தமது கல்வியைத் தொடர முடியாத மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான கல்வியை வழங்கவும் இவ்வாறான திறன் விருத்தி மையக் கட்டடங்களைப் பயன்படுத்த முடியும் என தெரிவித்தார். (4-6-8-30)

# யாழ். யுவதிக்கு பிரான்ஸில் உயரிய விருது



(பாரிஸ்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த செல்வி சுவஸ்திகா இந்திரஜித் பிரான்ஸில் வியத்தகு விஞ்ஞான மருத்துவ விருதினை பெற்றுள்ளார்.

பாரிஸில் வசிக்கும் சுவஸ்திகா பாரி சக்லே **(Paris-Saclay)** பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

பிரான்ஸ் சுகாதார சங்கம், பிரான்ஸ் இயற்பியல் சங்கம் என்பன சிமி பிசிக்ஸ் **(Chimie-Physique)** என்ற அமைப்பும் இணைந்து ஒவ்வொரு வருடமும் சிறந்த விஞ்ஞான ஆய்வுக்கான விருதினை வழங்கி வருகிறது.

அந்த வகையில் 2021 ஆம் ஆண்டுக்கான விருது. சுவஸ்திகா இந்திரஜித்துக்கு கிடைத்துள்ளது. கடந்த வருடம் காஇன் நொர்மண்டி **(Caen Normandie)** பல்கலைக் கழகத்தில் வேதியல் பிரிவில் முனைவர் ஆய்வு நடைபெற்றிருந்தது.

இதில் அவரது சிறந்த விஞ்ஞான ஆய்வாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவரின் கண்டுபிடிப்புக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-8)

# வடமராட்சி கடற்பரப்பில் 103 கிலோ கஞ்சா மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 103 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் அதிவேக படகு ஒன்று வடபகுதி கடற்பரப்பில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இதன்போது மணற் காட்டு கடற்பரப்பில் சந்தேகத்துக்கிட மான முறையில் பயணித்துக்கொண்டிருந்த படகு ஒன்றினை கடற்படையினர் சோதனையிட்டபோது அதற்குள் 103.75 கிலோகிராம் கஞ்சா காணப்பட்டது.

இதனை தொடர்ந்து படகில் இருந்த கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-6-8-60)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும்வாழும்மக்கள் அனைவரும்கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீவிஸ்வ நாத சுவாமி கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. சோ.சந்திர சேகரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-8-6)



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்தத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

(படம்:சிவசாந்தன்)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொரோனா விழிப்புணர்வை மேற்கொள்ளவும்,சுகாதாரக் கல்விப் பயன்பாட்டிற்காகவும் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் ஆகியன நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 1988ஆம் ஆண்டு உயர்தர மகளிர் பிரிவினரால் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்: சுபேசன்)

## திறன்விருத்தி மைய கட்டடம் திறந்து வைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் ஜே/327 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று முன்தினம் இளைஞர், யுவதிகளுக்கான திறன் விருத்தி மையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. (4-8-6-30)

## சூம் செயலி ஊடாக ஆடிப்பிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் இணையவழியில் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா இன்று இரவு 8 மணிக்கு சூம் செயலி வழியாக நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சியன தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் துணைவியூர் சி. கேசவன், ஆடிப்பிறப்பின் மகத்துவம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றுவார்.

நிகழ்வில் இணைந்து கொள் [illegible] 6730217677 [illegible] - **Tamil@123** ஆகும். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 | 200 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 160 | 170 | 180 | 200 |
| கரட் | 160 | 160 | 180 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 120 |
| புடோல் | 120 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 60 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 280 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 260 | 220 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 150 | 160 | 150 |
| பயற்றங்காய் | 140 | 200 | 120 | 120 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 160 | 160 | 120 | 160 |
| கறிமிளகாய் | 250 | 180 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 300 | 450 | 300 | 300 |
| போஞ்சி | 160 | 260 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 60 | 30 |
| தேசிக்காய் | 140 | 140 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 140 | 200 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இன்னமும் நீங்கவில்லை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இன்னும் நீங்கவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**


கொழும்பில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அந்த சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டெல்டா வகை கொரோனாத் தொற்றுக்குள்ளான 19 பேர் நாட்டின் பல பாகங்களில் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே டெல்டா வகை வைரஸ் நாட்டில் தொடர்ந்தும் பரவலடைவதை தடுக்க வேண்டுமாயின் பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத் தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார். (நி-5)

## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



**திரு. கே.வி. என்.சிவலிங்கம்**

(நிர்வாகி, புலோலி கல்வி நிலையம்,
ஆலோசகர் அகில இலங்கை இளங்கோ கழகம்)

கல்வியதே கருந்தனம் எனக் கைக்கொண்டு
களைப்பின்றி நாற்பதாண்டு காலம் இங்கே
வல்லமையாய் கல்வியுடன் கலைகள் பண்பை
வனப்புடனே பலர்க்களித்து நிமிர வைத்தோன்
எல்லவரும் ஏற்றிடவெம் பிள்ளைகள் போல் பலரை
ஏணியென ஏற்றிவைத்த செயலில் வல்லோன்
அல்லறை அகவையறுபது போல் பல கொண்டாட
ஆதிமூலத்தைப் பணிகின்றோம் வாழி! வாழி!!

(7239)

கலைக்கோயில்,
சின்னத்தாய்,
புலோலி தெற்கு.

கலாபூஷணம் க.ப.பரராஜசிங்கம்
(பப்பா) குடும்பத்தினர்.

## தொழுகைக்கு 100 பேர் அனுமதி

(கொழும்பு)

பள்ளிவாசல் தொழுகையின் போது சுகாதார விதிமுறைகளுக்கமைய ஒரே நேரத்தில் 100 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்களுக்குள் பிரவேசிக்கும் போதும் பாதுகாப்பு முகக்கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களை கொண்டு வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் மகைலாகு செய்வதை தவிர்த்து செயற்படுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

## இளங்கோ கழகத்தாரின் இனிய வாழ்த்துக்கள்



**திரு. நவரட்ணம் சிவலிங்கம்**

(பிரதி அதிபர், யா/ புனிதநகர் தமிழ் வித்தியாலயம்,
ஆலோசகர் - அகில இலங்கை இளங்கோ கழகம்)

கழகத்து நிகழ்வு என்றால்
கருத்தூன்றி மனம் ஒன்றி
அழகுற அன்பு செய்து
ஆலோசனை தந்து உயர்
வழியில் ஓங்கி நிற்க
உழைத்த ஆசான் என்றும்
மொழியில் பண்பாட்டில் கல்வியில்
முனைப்போ டிருக்கின்ற தீரன்

இருபத்தைந்து ஆண்டுகள்
எம் கழக வயதென்றால்
அருகமர்ந்து அணி செய்த
அவர் பணியும் அஃதே
பெரும் பணிகள் பல செய்து செயலினாலே
பெரியோனாய் திகழ்கின்ற நின்னுடைய
அரும்பணியின் மகுடமென அகவைநாளில்
அன்போடு பணிகிறோம் வாழி! வாழி!!

(7238)

புலோலி,
யாழ்ப்பாணம்

அகில இலங்கை
இளங்கோ கழகத்தினர்

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

ஆசிரிய சேவையில் 23 வருடங்கள் சேவை செய்து 24.01.2021 இல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திரு.வி. நற்குணசிங்கம். 27 வருடங்கள் ஆசிரிய சேவையாற்றி 22.06.2021 இல் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திருமதி. சி. சோமநாதன். 30 வருடங்கள் ஆசிரிய சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திருமதி.ஜெ.மதிவதனன் ஆகியோரது சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மணிவிழாக் கண்டு மகிழும் ஆசிரியப் பெருந்தகைகள் நீண்ட ஆயுள் ஆரோக்கியத்தோடு வாழ இறையாசி வேண்டி நிற்கிறோம்.



திருமதி. **சி. சோமநாதன்** (B.A, M.A. PGDE)
சித்தாந்தரத்தினம், திருமுறைச் செல்வர், அறநெறிச்சுடர்



திரு.வி. **நற்குணசிங்கம்**
(B.A,Dip.in. Edu)



திருமதி.ஜெ. **மதிவதனன்**
(B.A,Dip.in. Edu, Spe.Trd.Sci)

வாழ்த்துவோர்: இந்துசமய பாட ஆசிரியர் கழகத்தினர்

(C-2343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச சபையில் மணலினைப் பெறலாம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பரமன்கிராயில் இருந்து கௌதாரிமுனைக்குச் செல்லும் வீதியில் சரிந்துள்ள மணல் மேட்டில் இருந்து மணலினை விற்பனை செய்யும் நடவடிக்கையில் பூநகரி பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபையினால் கௌதாரிமுனை வீதிக்கு இடையூறாக சரிந்துள்ள மண்ணை அகற்ற வேண்டியுள்ளமையால் குறிப்பிட்ட அளவு மண் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. பொதுத்தேவைக்காக பெற வேண்டியிருப்பின் உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். நிபந்தனைகளுடன் வழங்கப்படும் என பூநகரி பிரதேச சபை அறிவித்துள்ளது.

மணல் தேவைப்படுவோர் 077 886 2556 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பூநகரி பிரதேச சபை அறிவித்துள்ளது. (4-8-6-350)

# புரேவிப் புயலுக்கான இழப்பீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டில் ஏற்பட்ட புரேவிப் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட தங்களுக்கு இதுவரை எந்த விதமான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை என்றும் இந்த இழப்பீடுகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புரேவிப் புயல் காரணமாக பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரையோர கிராமங்களில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக 483 படகுகள் 167 வரையான வெளியிணைப்பு இயந்திரங்கள், 1173 மீன்பிடி உபகரணங்கள் என்பன சேதமடைந்தன.

அத்துடன் நாச்சிக்குடா பகுதியில் மீனவர்களுக்கு சொந்தமான 6 வாடிகள், பச்சிலைப் பள்ளியில் 2 வாடிகள் என்பனவும் சேதமடைந்தன. இவற்றின் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை தமக்கான இழப்புகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புரேவிப்புயல் காரணமாக பாதிக்கப்பட்ட ஏனைய இழப்புகள், பயிர்களில் ஏற்பட்ட பாதிப்புக்கள், கால்நடை வளர்ப்பில் ஏற்பட்ட கால்நடைகளின் பாதிப்புகள் என்பதற்கான இழப்பீடுகளும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-8-6-315)

# கிராம உத்தியோத்தர் மீது தாக்குதல் சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளம் பிரிவு கிராம உத்தியோகத்தர் மீது நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

வவுனியா தாண்டிக்குளம் ஏ-9 வீதியின் புகையிரத தண்டவாளத்திற்கும் பிரதான வீதிக்கும் இடையே உள்ள அரசுக்கு சொந்தமான காணியில் சில நபர்கள் சுற்றுவேலி அமைத்து, வியாபார நிலையங்களையும் அமைத்திருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளிற்கமைய கடந்த 9 ஆம் திகதி அப்பகுதிக்கு சென்ற வவுனியா பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவினர் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபார நிலையங்களை அகற்றியிருந்தார்.

குறித்த சம்பவத்தினை சுட்டிக்காட்டி தாண்டிக்குளம் பிரிவு கிராம உத்தியோகத்தர் மீது நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக கிராம உத்தியோகத்தரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டதுடன் தாக்குதல் மேற்கொண்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (4-6-8-299)

# 2 மில்லியன் பெறுமதியான மருத்துவ இயந்திரங்கள் கையளிப்பு




(மன்னார்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு 2 மில்லியன் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டது.

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படும் நோயாளிகளை நோய்த் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக 21 இலட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு இயந்திரம் மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் முல்லைத்தீவு சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் உமா சங்கரிடம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைத்து மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ கையளித்தார். (4-8-6-285)

# யானை வேலிகளை அமைத்து தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காட்டு யானை அழிவுகளில் இருந்து தங்களையும் தமது வாழ்வாதாரப் பயிர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு யானை வேலிகளை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், அம்பகாமம், தச்சடம்பன், முத்து, விநாயகபுரம், மாங்குளம், கனகரத்தினபுரம் போன்ற பகுதிகளில் தொடரும் காட்டு யானைகளால் தங்களுடைய விவசாய செய்கைகள் நாளாந்தம் அழிக்கப்பட்டு வருவதாக பிரதேச விவசாயிகள், பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தென் பகுதியில் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட வளர்ப்பு யானைகள் தங்களுடைய பிரதேசங்களிலே கொண்டு வந்து இறக்கி விடப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான யானைகள் ஊர்மனைகளை நோக்கி வருவதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (4-8-6-315)

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி. மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் இன்று 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு மணல் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

எனவே ஏல விற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும் எனவும் ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் எனவும் கிளிநொச்சி. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-8)



நெற் செய்கையில் சேதன பசளையை முதன்மையாகப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரித் துண்டத்தின் வயல் விழா நேற்று முன்தினம் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நடைபெற்றது.

(படம்:-கிருஸ்ணகுமார்)

# ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தருமாறு மக்களுக்கு அழைப்பு

(நெளுக்குளம்)

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத தாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிற்கு தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று திரண்டு வருமாறு அருட்தந்தை மா.சத்திவேல் அழைப்பு விடுத்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாதத் தாக்குதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினையும் தொடர்ந்து நடக்கும் இனவாத வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்திலும் மக்களை கலந்து கொண்டு ஆதரவு தருமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு மருதானை C.S.R மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடத்த இருப்பதாகவும் மக்கள் அனைவரையும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து கொழும்பு லிப்ரன் சுற்று வட்டத்தில் தொடர்ந்து நடக்கும் இனவாத வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடக்கும் ஆர்ப்பாட்டதிலும் கலந்து கொண்டு தமிழ் மக்களை தமக்கு ஆதரவு தருமாறு அருட்தந்தை மா.சத்திவேல் அடிகளார் தெரிவித்துள்ளார். (4-8-6-299)



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்ட நடுக்குடா காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தினை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அமைச்சர் டளஸ் அழகப்பெரும வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

(படம்:-ஜோசப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

17.07.2021
ஆடி 01, சனிக்கிழமை
அட்டமி பின்னிரவு 12.32 மணிவரை
சித்திரை நள்ளிரவு 12.01 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
சந்திராஷ்டமம்:-பூரட்டாதி, உத்திரட்டாதி
ஆடிப்பிறப்பு

வளவன்


மேஷம்

மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள்.


ரிஷபம்

தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.


மிதுனம்

பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கடகம்

மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும்.


சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கன்னி

தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.


துலாம்

திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.


விருச்சிகம்

சுப செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.


தனுசு

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மகரம்

ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், அரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மீனம்

குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

உண்மையும், எண்ணெயும் எப்போதும் அடியில் தங்காது.

# அரசின் எதேச்சதிகார போக்கிற்கு எதிராக அணிதிரளுங்கள்

(வவுனியா)

**நாட்டின் சொத்துக்களையும் இறைமையையும் தாரை வார்க்கும் அரசின் எதேச்சதிகார போக்கிற்கு எதிராக அணிதிரளுமாறு புதிய ஜனநாயக மாக்கிச லெனினிசக்கட்சியின் வன்னி மாவட்ட செயலாளர் என்.பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கோட்டாபய, மகிந்த தலைமையிலான அரசாங்கம் மக்கள் விரோத செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருப்பதனை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. உணவுப் பொருட்கள், எரிபொருள் ஆகியவற்றின் சடுதியான விலை அதிகரிப்பு நாட்டு மக்களை, குறிப்பாக உழைக்கும் மக்களை வாட்டி வதைத்து வருகின்றது.

அத்துடன் நாட்டின் முதுகெலும்பாகவுள்ள விவசாயிகளின் உரப் பிரச்சினைக்கு உரிய மாற்றுத் தீர்வுகளை காணாமல், பசளையை நிறுத்தியது விவசாயிகளின் தலையில் கல்லைப் போட்டுக் கொல்வதற்கு சமமானது. அத்துடன் கொத்தலாவல இராணுவப் பல்கலைகழக சட்டமூலமானது உயர் கல்வித்துறை இராணுவமயமாக்கப்படும், கட்டுப்பாடுகளற்ற வகையில் தனியாருக்குத் தாரைவார்க்கப்படும் அபாய நிலமையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய செயற்பாடுகளைக் கண்டித்து இன்று சனிக்கிழமை வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் அரசியல் ஜனநாயக உரிமையில் கோட்டா, மகிந்த அரசு கைவைப்பதினை கண்டிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் போராட்டத்தில் இன, மத, மொழி பேதம் கடந்து அனைத்து அமைப்புக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம் எனத் தெரிவித்தார். (4-8-6)

# யாழ்.மேல் நீதிமன்ற நடவடிக்கையின் கால ஒழுங்கில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வு இம்மாதம் 28 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ள்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நடவடிக்கைகளின் கால ஒழுங்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் ஜெ.ஜெயரஞ்சன் வெளியிட்டுள்ளார். அதனடிப்படையில் இம்மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமைகளில் நண்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும்.

அதேபோன்று யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வு திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமைகளில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் பதிவாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் மீண்டும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இரண்டு நீதிமன்ற நடவடிக்கைகளில் இவ்வாறு மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. (4-8-6-33)

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவராக வட பகுதியின் முன்னாள் பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்தா ஹதுருசிங் காவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.**



# சட்டவிரோத கிரவல் அகழ்வு; 4 கனரக வாகனங்களுடன் ஐவர் கைது

(முறிகண்டி)

கொக்காவில் பிரதேசத்தில் சட்டவிரோத கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி முற்றுகையிடப்பட்டு 4 கனரக வாகனங்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செய [illegible] யற்ற கிரவல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக நேற்றைய தினம் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் மண் அகழ்வாராய்ச்சி தள சட்ட பிரிவினை அமுலாக்கும் அதிகாரிகள் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

இதன்போது கிரவல் அகழ்விற்கு அனுமதிக்கப்பட்டமைக்கு மாறாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் மீது நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-8-6-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவில் அடையாளம் தெரியாத இரு பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

(டில்லி)

இந்தியாவின் ஸ்ரீநகரில் அடையாளம் தெரியாத 2 பயங்கர வாதிகளைப் பாதுகாப்பு படையினர் நேற்றைய தினம் சுட்டுக் கொன்றனர்.

இது குறித்து பாதுகாப்பு துறை தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள ஆலம் தார் காலனி, தன்மார் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிரு



ந்ததாக கிடைத்த தகவலை யடுத்து பாதுகாப்புப் படையினர் அப் பகுதியில் நேற்று அதிகாலை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்பொது இது தரப்புக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் அடையாளம் தெரியாத பயங்கரவாதிகள் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ந்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (8)

## 21 குழந்தைகளுக்கு புதுச்சேரியில் தொற்று

(சென்னை)

புதுச்சேரியில் 21 குழந்தைகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியானது தொடர்பாக ஆய்வறிக்கை தர வலியுறுத்தப் பட்டுள்ளது.

கொரோனா மேலாண்மை சீராய்வு கூட்டத்தில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் கூறுகையில்,

21 குழந்தைகள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். கொரோனா 2 ஆவது அலையைத் தொடர்ந்து, 3 ஆவது அலை பாதிப்பு வரும் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். 3 ஆவது அலையின்போது குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுவர்கள் எனக் கூறப்படுகிறது. கொரோனா 3 ஆவது அலையில் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைகளில் தனிப் பிரிவுகள் தொடங்க வாய்மொழியாக உத்தரவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (8)



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கார் ஓட்டுநர் 1,330 திருக்குறள்களையும் 17 மணி 19 நிமிடங்களில் தலைகீழாக எழுதி சாதனை படைத்து சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றார்.

## கிணற்றுக்குள் வீழ்ந்த கிராம மக்கள்

(டில்லி)

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் விதிஷா மாவட்டத்தில் உள்ள கஞ்சப சோதா என்ற கிராமத்தில் குழந்தை ஒன்று கிணற்றில் தவறி விழுந்துள்ளது.

அந்த குழந்தையை காப்பாற்றுவதற்காக கிராம மக்கள் கிணற்றின் அருகில் திரண்டு வந்துள்ளனர்.

அப்போது கிணற்றின் சுற்றுச்சுவரில் அதிக பாரம் ஏற்பட்டதால், அது இடிந்து விழுந்துள்ளது. இதனால் கிணற்றின் அருகே நின்று கொண்டிருந்த சுமார் 30 பேர் கிணற்றுக்குள் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு, உடனடியாக மீட்புக் குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

கிணற்றில் இருந்து காயமடைந்த நிலையில் 19 பேர் மீட்கப்பட்ட நிலையில், 3 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். (8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :- 4 088 757**

**தொற்று :-190 023 443**

**(நேற்றைய மாலை நிலவரம்)**

## மூன்று மாத ச

## சிறையிலுள்ள 7,000

### தலிபான்கள் நிப

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் மூன்று மாத சண்டை நிறு வைக்கப்பட்டிருக்கும் சுமார் ஏழாயிரம் பேரை தலிபான்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.**

## கியூபாவில் உண மீதான சுங்க



(ஹவானா)

கியூபா செல்கிற பயணிகள் இந்த ஆண்டு இறுதி வரையில் வரம்பின்றி உணவு, மருந்து பொருட்கள் மீதான சுங்க வரி இரத்துச் செய்யப்பட்டது.

## பதவி விலகினார் லெபனான் பிரதமர்



(பெய்ரூட்)

கடந்த எட்டு மாதங்களாக அரசாங்கத்தை அமைக்கத் தவறியதால் லெபனான் பிரதம அமைச்சர் சாத் ஹரிரி நேற்று முன்தினம் பதவி விலகினார்.

பாப்தா அரண்மனையி ஜனாதிபதி மைக்கேல் ஆவுனு ஒரு குறுகிய சந்திப்பைத் தெ ர்ந்து ஹரிரி இராஜினாமா செ தார்.

"நாங்கள் ஜனாதிபதியுட உடன்பட்டு செயற்பட முடியா என்பது தெளிவாகிறது" என ஹரிரி ஜனாதிபதி மைக்கே ஆவுனுடனான 20 நிமிட சந் ப்புக்குப் பின்னர் கூறினார்.

ஹரிரியின் பதவி விலகலை டுத்து அவரது ஆதரவாளர்க வீதிகளில் இறங்கியுள்ளன நேற்று முன்தினம் பெய்ருட் சுற்றியுள்ள பல பகுதிகளில் எரி டயர்கள் மற்றும் குப்பைத் தொ களைக் கொண்டு வீதிகளுடா போக்குவரத்துக்களை தடுத்த ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# சண்டை நிறுத்தத்துக்கு
## 00 பேரை விடுவிக்க வேண்டும்

### ந்தனை

நிறுத்தத்துக்கு ஈடாக, சிறை
ர விடுவிக்க வேண்டும் என

அத்துடன் தற்போது சண்டை நிறுத்தத்துக்கு முன் வந்திருக்கும் தலிபான்கள், வேறொரு முக்கியமான நிபந்தனையையும் விதித்துள்ளனர்.

தங்களது இயக்கத்தின் பெயரை அமெரிக்காவின் தடைப்பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

இதனிடையே இது 'மிகப்பெரிய கோரிக்கை' என ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் நதீர் நதீரி கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு இதே போன்றதொரு சூழலில் சுமார் ஐந்தாயிரம் தலிபான் கைதிகள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களில் பலர் தற்போது போர்க்களத்திற்கு திரும்பியதால், பல இடங்களில் வன்முறை அதிகரித்து நாட்டில் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. (8)



# ணவு, மருந்துகள்
# க வரி இரத்து

கியூபா நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் உணவுப் பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. விலைவாசிகள் கடுமையாக உயர்ந்துள்ளன.

உணவுப்பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்குமான சுங்க வரிகள் இரத்து செய்யப்பட வேண்டும் என்பது மக்கள் கோரிக்கையாக அமைந்தது. இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று வீதிகளில் இறங்கிப் போராட்டங்கள் நடத்தினர்.

இந்த நிலையில், உணவுப் பொருட்கள், மருந்துப்பொருட்கள் மீதான சுங்க வரிகளை தற்காலிகமாக இரத்து செய்து கியூபா அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் கியூபா செல்கிற பயணிகள் இந்த ஆண்டு இறுதிவரையில் வரம்பின்றி உணவு, மருந்து பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

# பாரி நகரை தாக்கிய சூறாவளி

(ஒன்ராறியோ)

ஒன்ராறியோ மாகாணம் - பாரி நகரில் வீசிய திடீர் சூறாவளி காரணமாக 9 பேர் காயமடைந்தனர். அவர்களில் நான்கு பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். 25 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

உள்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் வீசிய சூறாவளி விளைவுகளால் 9 பேர் காயமடைந்துள்ளதை செய்தியாளர்களிடம் உறுதி செய்த பாரி மேயர் ஜெஃப் லெஹ்மன், இதுவரை எந்தவிதமான உயிரிழப்புகளும் பதிவாகவில்லை என்று கூறினார்.



இதேவேளை, சூறாவளியால் சுமார் 25 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ள நிலையில் இடிபாடுகளுக்குள் யாரேனும் சிக்கியுள்ளார்களா? என அறிந்துகொள்ள தேடுதல்கள் இடம்பெற்று வருவதாக நகர தீயணைப்பு மற்றும் அவசரகால மீட்புக் குழுவினர் அறிவித்துள்ளனர். (8)

ர்
ர்

னையில்
வுனுடன்
ந் தொட
ா செய்

தியுடன்
டியாது
என்று
க்கேல்
ட சந்தி

கலையை
ளர்கள்
ர்ளனர்.
ருட்டைச்
ஏரியும்
தொட்டி
னுயான
டுத்துள்
(8)

# கொரோனா தோற்றம் குறித்த தரவுகளை
# வழங்குமாறு சீனாவுக்கு மீண்டும் அழுத்தம்




(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தோற்றம் தொடர்பான மூல தரவுகளை சீனா கண்டிப்பாக வெளிப்படுத்த வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோரஸ் அதானம் கெப்ரேயஸ் மீண்டும் வலியுறுத்தினார்.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

கொரோனா தோற்றம் குறித்த தரவுகள் இல்லாததால் அது குறித்த விசாரணைகள் தடைப்பட்டு வருவதாக கூறினார்.

கொரோனாவின் தோற்றம் குறித்த விசாரணைக்கு வெளிப்படையாக ஒத்துழைப்பு வழங்குமாறு சீனாவை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இந்த விடயத்தில் உண்மையைக் கண்டறிவது பாதிக்கப்பட்ட மற்றும் இறந்த மில்லியன் கணக்கானவர்களுக்கும் நாம் செய்யும் மரியாதையாக இருக்கும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோரஸ் அதானம் கெப்ரேயஸ் தெரிவித்தார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் வியாழக்கிழமை டெட்ரோரஸிடன் ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் பேச்சுவார்த்தை நடத்திய ஜேர்மன் சுகாதார அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான், கொவிட்-19 தொற்று நோயின் தோற்றம் குறித்து விசாரணைகளைத் தொடர ஒத்துழைக்குமாறு சீனாவை வலியுறுத்தினார். இந்த விசாரணைக்கு மேலும் தகவல்கள் தேவை என்று அவர் கூறினார்.

அத்துடன், ஏழை நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்கும் உதவும் வகையில் உலக சுகாதார அமைப்புக்கு 260 மில்லியன் யூரோ (307 மில்லியன் டொலர்) நன்கொடையை அவர் அறிவித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–314

# எந்தைவரமாகத் தந்ததை வரிகளாக்கி...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

மாதாவும் பிதாவும் எமக்கான ஆரம்பப் புள்ளிகளாகி கருவாக உருவாக்கி ஆன்மாவின் இருப்பிடமாகி உலகுக்கும் உழவர் பெரு மக்களுக்கும் உழவுக் கல்வியைக் கற்றதனால் இறுதிவரை உழவுப் பணியே என் புணியாயிற்று. எந்தை என் கைப்பிடித்து நாட்டிய விவசாய விதை வளர்ந்து ஆழ வேரூன்றி விருட்சமாகி தன்னிலை உயர்ந்து அவருயிரின் விருப்பினை இறுதி வரை கைக்கொண்டு அதன் வெளிப்பாடாக இதுவரையும் இனியும் இக் கைகள் எழுதிய இக் கட்டுரைகள் உங்களுடன் என்னை இணைத்தது எனலாம்.

அதற்காக வலம்புரி தந்தபக்கங்கள் அனைத்தும் விவசாயப் பெருமக்களுக்கான செய்திகளை சனிக்கிழமை தோறும் கொண்டுவந்து சேர்த்தன இன்னும் அதுதொடரும். அதிகாலையில் தினமும் தேவாரம் பாடி முடிந்து வலம்புரியில் எழுதிய கட்டுரையை படித்து பாராட்டும் விமர்சிக்கும் முதல் வாசகர் என் தந்தை தான். புலமையே என் வீட்டிலிருந்து என்னை வயப்படுத்தி வழிப்படுத்தி இத்துறையில் மிளிர வைத்து அழகு பார்த்திருக்கின்றது. இப்படிக் கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும் அல்லவா.

நேர்மையும் அதீத திறனும் விடாமுயற்சியும் கொண்ட கொள்கையில் இறுதிவரை பயணித்ததை வாழ்க்கையின் கொள்கையாக கடைப்பிடிக்க முன்னுதாரணமானவர் எனது தந்தை வேலுப்பிள்ளை குணசிங்கம் அவர்கள். வள்ளியம்மைக்கு மகனாகி இறுதிவரை தனக்குரிய இறுமாப்புடன் வாழ்ந்து அனுபவத்தினால் தாம் பெற்ற விவசாயத்தின் புலமையையும் நிர்வாகத்தின் திறமையையும் என்னுள் விதைத்த எந்தை இவ்வுலக பந்தந்தை முடிவுறுத்திவிட்டார்.

எமது நாட்டின் விவசாய திணைக்களத்தில் ஆய்வு கூட உதவியாளராக இணைந்து பேராதனை. அனுராதபுரம். கிளிநொச்சி ஆகிய விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் பிராந்திய நிலையங்களில் பணி புரிந்து இறுதியில் பயிர் நோயியல் துறையில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தராகி போர்ச் சூழலில் கூட அப்போதய பிராந்திய பணிப்பாளர் கலாநிதி விவேகானந்தன் அவர்களுடனிணைந்து துவிச்சக்கர வண்டியில் தம்பணிக்காக கிளிநொச்சி வவுனியா முருங்கன் என பயணித்ததால் இளைப்பாறிய போது முள்ளந்தண்டு தேய்வு நோயினால் 16 வருடங்கள் புற வழிசிறுநீர் வெளியேற்றியுடன் (Catheter) எமது அரவணைப்பிலேயேவாழ்ந்து 19.06.2021 சனிக்கிழமை இறையடியெய்தினார்.

தனக்குள் இருந்த அவாவினை எனக்குள் விதையாக விதைத்து இன்று வரைசெய்ததெல்லாம் இனியும் அறுவடை செய்வதெல்லாம் அவருக்கே சமர்ப்பணமாக முன்வைப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

பதவியிலிருந்தாலும் எந்தையும் தாயும் இயங்கும் காலம் வரைமொட்டைக் கறுப்பனும் மொறுங்கனும் என பாரம்பரிய நெல்லினங்களை பயன்படுத்தி விவசாயஞ் செய்து அந்த அறுவடையை குடும்பத்தின் அந்த வருடத்திற்கும் அடுத்த வருட விதை நெல்லுக்கும் எடுத்து வைத்த பாங்கினை இக் காலத்தின் கொரோனா தனிமைப்படுத்தலுடனான உணவுத் தேவையுடன் ஒப்பிடுகையில் முன்கூட்டியே தம்மை தயார்ப்படுத்திய கைங்கரியத்தை வியந்து பார்க்க வேண்டியிருக்கிறது. பாரம்பரியமாக இயற்கையுடன் எமது நாட்டு பயிரினங்களை பயிரிட்டு அந்த சத்தான உணவுகளை உண்டு சுகதேகிகளாக வாழ்ந்து 84 வயதில் இயற்கை எய்தும் காலங்கள் இனிவரும் சந்ததிக்கு பீட்சாவுடனும் பர்கருடனும் கிடைக்காது என்பதே யதார்த்தம். குத்தரிசி பழஞ் சோறும் பழங்கறியும் தயிரும் மோரும் கருப்பட்டியும் தேனும் உண்டு வாழ்ந்த காலங்கள் மாறி சம்பாவும் கொக்கோகோலாவுமாக மாறி வாழ்வின் காலத்தை சுருக்கியே விட்டிருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 327



அமரர் வேலுப்பிள்ளை குணசிங்கம்
ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்

நோயிற்குள் அடங்கும் வரை விவசாயத்தை தன்னுடைய உயிர் மூச்சாக கொண்டு போர்மேகம் சூழ்ந்து அவதிப்பட்ட காலங்களில் மண்வெட்டியால் நிலங் கொத்தி மறுத்து நெல் விசிறியெறிந்து என்னையும் உதவிக்கு வைத்து தன்கையால் அறுவடை செய்து வீட்டுக்கு எடுத்து வந்து எந்த இடர் வந்தாலும் தளர்ந்து விடாதவாறு குடும்பத்தை பாதுகாத்தவர். பணியிலிருந்த காலங்களில் விவசாயிகளை பெருமைக் குரியவர்களாக இறுதி வரை மதித்துவந்தவர்.

அவர்களுக்கான ஆலோசனைகளை இயங்கிய காலம் வரை அவர்தம் விளைநிலம் நோக்கி சென்று பயிரிலுள்ள பிரச்சனைகளை அவதானித்து ஆலோசனைகளையும் கொடுத்து வந்ததனை கண்களால் கண்டு பெருமிதமடைந்திருக்கின்றேன்.

விவசாயத் திணைக்களத்தின் அனுமதி பெற்று பாகிஸ்தானின் குவெற்றா விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சியும் பின்னர் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள உலக நெல் ஆராய்ச்சி நிலையத்திலும் பயிற்சிகளைப் பெற்று தமது புலமையை நெறிப்படுத்திக் கொண்டதால் பயிர்களில் வரும் நோய்களை ஏற்படுத்தும் காரணிகளை இலகுவில் கண்டறியும் (Diagnosis) வல்லமையுடையவராக இருந்தார். இந்தஅனுபவம் விவசாயிகளிடையே இவரது புலமைத்துவத்தை நேரடியாக எடுத்துச் சென்றதுடன் அனைவருக்கும் இவரது உதவி கிடைக்கக்கூடியதாக இருந்தது.

பட்டங்கள் பல பெற்று தேர்ந்தவனாயினும் பயிர்களில் வரும் பிரச்சனைகளை இன்னதென இனங்காணாது தளர்வடையும் போது தனது அனுபவத்தின் முதிர்ச்சியால் என்னிடமே தர்க்கித்து அதனை இனங்காணும் வழிமுறைகளைசிந்திக்கவும் வைத்தவர்.பட்டறிவு மட்டும் இருந்து பிரயோசனமில்லை எத்துறையிலும் பிரகாசிக்க அனுபவமும் மிகவும் அவசியம் என்பதே அவரின் வாதமாகவே இருந்தது. கொரோனா காலத்து மெய்நிகர் இணைய வழி கல்வியில் பட்டறிவு மட்டுமே கிடைக்கின்றது என்றும் விளை நில அனுபவமும் விவசாயம் பயிலும் அனைவருக்கும் அவசியம் கிடைக்க வேண்டும் என வலியுறுத்தியவர்.

அவரின் விளை நிலத்தில் பெற்ற அனுபவத்தினை அடியொற்றியே இத் துறையில் மிளிர்வதற்கும் அந்த அனுபவங்களை கடந்த 13 வருடங்களாக எமது தாய்மொழியில் கட்டுரைகளாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்குகாரணமாக இருந்திருக்கின்றது. எந்த இடர் வரினும் விவசாயப் பெருமக்களுக்கான பணியை இடைநிறுத்தக் கூடாதெனகட்டளையும் இட்டவர் புலமையை விற்றுப் பிழைப்பது நாகரீகம் இல்லையென வாதிடவும் செய்தவர். விவசாயப் பெருமக்களின் பிரச்சனைகளை அவர்களின் விளை நிலத்திற்கு சென்று ஆராய்ந்து அதிலிருந்து மாதிரிகளை எடுத்து வந்து ஆய்வு கூடத்தில் பரீட்சித்து அவர்களுக்கு வேண்டிய ஆலோ[illegible] ஆய்வுகளைச் செய்ய. ஆய்வு முடிவுகளை விவசாயப் பெருமக்களுக்கு தெரிவிக்ககட்டுரைகளாக எழுத இக் கைகளைத் தூண்டியவரும் அவரேதான். படுக்கையில் கிடந்தாலும் தன் அனுபவப் புலமையை சிறிதளவிலேனும் விட்டுக்கொடுக் காது தாவரநோய்களை துல்லியமாக இனங்காணும் வல்லமையுள்ளவராக இருந்ததை எனக்கான பாடமாக கொண்டு எனது அனுவத்திறனையும் மெருகூட்டிக் கொண்டேன்.

கரவெட்டிமத்தி அபிவிருத்தி ஒன்றியத்தில் தனது ஆளுமையைப் பதித்து தனது நிர்வாகத்திறனையும் நிதி முகாமைத்துவ திறனையும் நிரூபித்தும் காட்டியவர். சமூக சேவையில் அவர் கொண்ட ஆர்வம் அத்துளு குளத்தின் மீள்திருத்தத்திற்கும் பின்னர் அதிலிருந்து மக்கள் சிறுபோகத்தை செய்வதற்கு தூண்டுதலாகவும் இருந்தவர். மக்கள் பணியே மகேசன் பணியென எமக்கு எம் கண்முன்னால் செய்து காட்டி அதனை பின்பற்ற வைத்தவர்.

பயிர்ச்செய்கையின் நுணுக்கங்களை அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென தினமும் அதுபற்றிய ஆக்கங்கள் நூல்களைவாசிப் பதிலும் அதனை நடைமுறைக்கு பொருத்தமானதா என தம் பணியில் செயற்படுத்தியும் பார்த்தவர். இறுதியில் ஆராய்ச்சியாளராக பணியாற்றிய காலங்களில் பயிர்களிலுள்ள நோய்த்தாக்கங்களின் அடி நுனிபற்றி ஆழ மாக தெரிந்து வைத்திருந்தமை என் புலமையை விருத்தி செய்ய கால்கோலாக அமைந்தது. தற்போதயகாலம் சுற்றுச் சூழலை பாதுகாக்கின்ற அசேதனபசளைகள் பீடைநாசினிகள் என்பனவற்றின் பயன்பாட்டைமட்டுப்படுத்துகின்ற இன்னும் இல்லாதொழிக்கின்ற காலமாக மாற்றம் பெறத் தொடங்கியிருக்கின்றது.

எதிர்கால சந்ததி வளமான நோயற்றதேகாரோக்கியம் மிக்க சந்ததியாக உருவாக வேண்டும் என்னும் அவா அனைவரின் மத்தியிலும் எழுந்துள்ள தனை காணமுடிகி ன்றது.

கொரோனா வைரசுவின் முதலாவது அலைமுடிய முன்பு தன் கட்டமைப்பில் திரிபுகளையேற்படுத்தி டெல்ரா, சீற்றா என பல வேடங்களைக் கொண்டு மனித குலத்தை இன்னமும் தமது கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க சீனத்து வைரசு முனைகின்றது. அதனையும் வெற்றி கொண்டு நமது சந்ததியை வளமான சந்ததியாக நோயெதிர்ப்பு உள்ள சந்ததியாக்க ஒவ்வொரு குடும்பமும் பாடுபடல் வேண்டும்.

இதுகாலத்தின் கட்டாயமும் கூட. இந்நேரத்தில் தான் உலக மக்களை பாரம்பரிய உணவு. பாரம்பரியவாழ்க்கை முறை இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை என்பனபற்றிசிந்திக்கவும் வழிவகுத்திருக்கின்றது. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பதற்கிணங்க நோயற்ற சந்ததியை உருவாக்க வேண்டிய காலம் அவசியமானதாக வந்திருக்கின்றது. அசேதன இரசாயன பாவனையை மட்டுப்படுத்தும் சமகால செயற்பாட்டுக்கு விவசாய பெருமக்களிடம் வரவேற்பும் எதிர்ப்பும் இருப்பதனைகாண முடிகின்றது. பொதுமக்களின் நலன்கருதி நாட்டின் தேவை கருதி சில முடிவுகள் முத்தாய்ப்பாக எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

நாம் அனைவரும் ஒருமித்து இயங்கினாலேயே கொரோனா போன்ற இன்னும் பல தொற்று நோய்கள் எம்மை அணுகும் போது வருமுன் காப்போம் என்னும் கருப்பொருளுக்கமைவாக எம்மை முன்கூட்டியே தயார்ப்படுத்திக் கொள்ளமுடியும். நம்மை நாமே காப்போம் என்பது அர்த்தமுள்ளதாக மனதளவிலும் பின்னர் செயலுருவிலும் இருக்க வேண்டும். எம்மை சுகதேகிகளாக இனிவரும் காலத்தை வெற்றி கொள்வதற்கான இயற்கை வழிமுறைகளை பெறுவதற்குஅனைவருக்கும் அறிவூட்டுதல் அவசியமானதாகும். அதுசார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இனிவரும் கட்டுரைகளை வடிவமைப்பது சாலப் பொருத்தமாகும்.

எந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் தனயனாக இயற்கைவழி விவசாயத்தின் மகிமையை நாம் இன்னும் உணர்ந்து வளமான சிறந்த சந்ததியை உருவாக்கிட நம் மனதில் முதலில் மாற்றத்தை கொண்டு வந்து அதனை செயற்படுத்திட நாம் அனைவரும் இணைந்து பாடுபடுவோம். என் கடன் பணிசெய்து கிடப்பதே இது எனக்கு மட்டுமல்ல எமக்கான அறிவுறுத்தலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை நீக்கத்தை

## அத்தியாவசிய சேவைக்காக பயன்படுத்துங்கள்

### அஜித் ரோஹண

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை அத்தியாவசிய சேவை மற்றும் ஊழியர்களுக்கு மட்டுமே ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறினார்.

இந்த நிலையில் மாகாணங்களுக்கு இடையேயான.பயணத்தடையை மீற முயற்சித்தமைக்காக 900 இற்கும்மேற்பட்டோர்எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும்அவர் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தின் 14 நுழைவு மற்றும் வெளியேறும்இடங்களில் பொலிஸார் தொடர்ந்து வாகனங்களை சோதனை செய்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் 413 வாகனங்களில் 928 பேர் பயணத் தடையை மீறமுயற்சித்ததாகவும்அவர்கள்எச்சரிக்கப்பட்டு திருப்பி விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடையை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். (நி-5)

# பல்கலை.விரிவுரையாளர்கள் - சஜித் சந்திப்பு



(கொழும்பு)

உத்தேச கொத்தலாவல பாதுகாப்புக் பல்கலைக்கழக சட்டம் குறித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தொடர்புடைய சட்டமூலம்மற்றும்அது ஏற்படுத்தும் ஆபத்துகள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு ஆகியவை இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

இலவச கல்விக்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்க மாட்டாது என்றும், இலவச கல்வியைப் பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக முன்னிற்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தார். (நி-5)

# 15 இலட்சம் மொடர்னா தடுப்பூசிகள் நாட்டை வந்தடைந்தன

(கொழும்பு)

அமெரிக்காவினால் கொவெக்ஸ் வேலைத்திட்டத்தின் கீழ் நன்கொடையாக வழங்கப்பட்ட 15 இலட்சம் மொடர்னா தடுப்பூசிகள் நேற்று இலங்கை வந்தடைந்துள்ளன.

அமெரிக்காவில் இருந்து கட்டார் டோஹாவிற்கு அனுப்பப்பட்டிருந்த குறித்த மொடர்னா தடுப்பூசிகள் அங்கிருந்து கட்டாருக்கு சொந்தமான கிவ் ஆர் 664 ரக விமானத்தின் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (நி-5)

# ஐ.தே.கவுடன் கைகோர்ப்பாரா திகாம்பரம் எம்.பி. ?

(கொழும்பு)

தனிப்பட்ட தேவைக்காக வெளிநாடு சென்றிருந்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் நாடு திரும்பிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்குச் சென்று முக்கிய சந்திப்பில் பங்கேற்றுள்ளார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவைச் சந்தித்து கடந்தகால மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் திகாம்பரம் பேச்சு நடத்தியுள்ளார் எனவும் அந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இன்னும் ஓரிரு நாட்களில் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிய வருகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய திகாம்பரத்துக்கு நல்லாட்சியின்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி வழங்கப்பட்டது. 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் யானை சின்னத்தின் கீழ்தான் திகாம்பரம் போட்டியிட்டார். 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் முற்போக்குக் கூட்டணியாக யானை சின்னத்தின் கீழ் தான் களமிறங்கியது.

எனினும், 2020 ஜனாதிபதித் தேர்தலில் திகாம்பரம் சஜித்துக்கு



ஆதரவு வழங்கினார். பொதுத் தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்டார்.

தற்போது ஐக்கிய மக்கள் சக்திக்குள் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு குறிப்பாக மலையகத் தலைவர்களுக்கு உரிய இடமில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஐ.தே.கவுடன் திகாம்பரம் பேச்சு நடத்தியுள்ளமை அரசியல் [illegible] (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிலநடுக்க அளவுகோல்

அமெரிக்காவிலே உள்ள கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் இயற்பியல் பேராசிரியர் ஒருத்தர் இருந்தார்.

அவர் நிலநடுக்கங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்றவர். ஒவ்வோர் ஆண்டும் 200 இற்கும் அதிகமான நிலநடுக்கங்களை அவர் ஆய்வு செய்து இருக்கின்றார்.

ஒரு இடத்திலே எவ்வளவு நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை எப்படிச் சொல்வது? அதுக்காக அவர் ஒரு அளவுமானியை உருவாக்கினார். இது நடந்தது 1935 இலே. அதுக்குப்பிறகு தான் எந்த இடத்திலே நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அந்த அளவுகோலை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள்.

அவருடைய பெயரை அதுக்கு வைத்தார்கள். ரிக்டர் அளவுகோல், 1 என்கின்ற எண்ணோட தொடங்குகின்றது. ஒவ்வொரு அலகும் முந்தையதை விட பத்து மடங்கு பெரியது. இதை கணிதத் துறையில் "லாக்ரத முறை" என்று சொல்லுகிறார்கள்.

ரிக்டர் அளவுகோலை கண்டுபிடித்த சார்லஸ் பிரான்சிஸ் ரிக்டர் அமெரிக்காவிலே ஒஹியோ என்கின்ற இடத்திலே 26.4.1900 இல் பிறந்தார். 1927 இல் கலிபோர்னியாவிலே உள்ள பாசடேனா என்கின்ற நிலநடுக்க ஆய்வுகூடத்திலே பணியைத் தொடங்கினார்.

கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்விக் கழகத்திலே இயற்பியல் பாடத்திலே 1928 இல் டாக்டர் பட்டம் பெற்றார். கால்டெக்கில் உள்ள நிலநடுக்கவியல் ஆய்வுக் கழகத்தில் 1936 முதல் 1970 வரை பேராசிரியராக பணியாற்றினார்.

இந்தக் காலகட்டத்திலே தான் அவர் நிலநடுக்கத்தைக் கணக்கிடுவதற்கு அளவுகோல் ஒன்றை உருவாக்கினார்.

கலிபோர்னியாவிலே உள்ள அல்டாடேனா என்ற இடத்தில் 1985 ஆம் ஆண்டு 85 ஆவது வயதிலே அவர் காலமானார்.

நிலநடுக்கம் என்பது அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டு தான் உள்ளது.

1999, செப்டெம்பர் மாதம் தாய்வானிலே மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிலே 2400 பேர் இறந்து விட்டார்கள்.

அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலிலே 7.6 என்று பதிவாகி இருந்தது.

கடந்த ஜனவரி (2001) 26 இல் குஜராத்திலே ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.9 என்று பதிவாகி உள்ளது. தாய்வானிலே பதிவானதை விட இது அதிகம்–அது 7.6. இது 7.9. அதனாலே அதனுடைய விளைவும் அதிகம் என்று அர்த்தமில்லை. பூமியிலேயிருந்து எவ்வளவு சக்தி வெளிப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கிறது தான் இந்த அளவுகோல்.

இந்த அளவுகோலிலே இரண்டு அல்லது அதற்குக் கீழே நிலநடுக்கம் பதிவாகியிருந்தால் அது இலேசான நிலநடுக்கம் என்று பேரு.

இதை சாதாரணமாக மக்கள் உணர்வதில்லை. அதை நம்மாலே உணர முடியும்.

1950 இல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலே பூகம்பம் ரிக்டர் அளவு 8.6.

1960 இல் சான்பிரான்சிஸ்கோவிலே பூகம்பம் 8.3.

1985 இல் மெக்சிக்கோவில் பூகம்பம் 8.1.

1964 இல் புனிதவெள்ளி அன்று அலாஸ்காவிலே பூகம்பம் 8.

1976 இல் ஜுலை, மாதம் 28 ஆம் திகதி சீனாவின் வடகிழக்குப் பகுதியிலே ரிக்டர் அளவுகோல்படி 7.8 தான். ஆனால் விளைவு பயங்கரம். 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்து போனார்கள். 1556 இல் சீனாவிலே ஒரு பூகம்பம் வந்ததாம். அதாவது சுமார் 450 வருடத்துக்கு முன்னர்!

அப்போதெல்லாம் ரிக்டர் அளவுகோல் என்றால் என்னென்றே தெரியாது. இருந்திருந்தால் 9 என்று பதிவாகி இருக்கும் என்று சொல்கிறார்கள். அப்போ 8 இலட்சத்து 30 ஆயிரம் போர் செத்துப் போனதாக சொல்கிறார்கள். ஆக பூகம்பம் என்றால் பயங்கரம்தான்.

மனிதன் இயற்கையை புரிந்துகொண்டு அதை அனுசரித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம். ஒரு ஊரிலே பூகம்பம் வரப் போகிறது என்று சொல்லிவிட்டார்கள். உடனே அவன் தன் பிள்ளையை பக்கத்திலே உள்ள இன்னொரு கிராமத்திலே உறவினர் வீட்டிலே கொண்டு போய் விட்டு விட்டார்.

"பத்து நாள் கழித்து வந்து கூப்பிட்டுக் கொண்டு போகிறேன். அது வரைக்கும் பையனைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி வந்து விட்டார். இவர் வந்த மறுநாளே உறவினரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. "உடனடியாக வந்து உங்கள் பையனை அழைத்துக் கொண்டு போங்கள். அதற்குப் பதிலாக பூகம்பத்தை வேண்டுமென்றால் இங்கே அனுப்பி வையுங்கள்" என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

29

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் சரத்தின் உட்பிரிவு 2ன்படி, நவம்பர் 14, 1987 இற்கு முன்னர் செய்யப்பட்ட எந்தவொரு சட்டமும், அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் மாகாண நிரல் (நிரல்I) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்திலும் எந்தவொரு உத்தரவு (Order), பிரகடனம் (Proclamation), அறிவிப்பு (Notification), ஒழுங்குமுறை (regulation) அல்லது விதிமுறைகளைச் (rule) செய்ய ஒரு அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கிறது, அத்தகைய அதிகாரம், அந்த மாகாணத்தின் ஆளுநரால் அல்லது அந்த மாகாணத்தின் அமைச்சரவையின் அமைச்சரால் பயன்படுத்தப்படல் வேண்டும், அந்த விடயம் யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, அதன்படி, சட்டத்தின் எந்தவொரு சார்பு பார்வையிலும் குறிப்புகள் அந்த அதிகாரம், ஒரு "அமைச்சருக்கு", மாகாண ஆளுநர் அல்லது மாகாண அமைச்சர்கள் குழுவின் அமைச்சர் ஆகியோருக்கு ஒரு குறிப்பை உள்ளடக்கியதாகக் கருதப்படும்.

உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு சட்டமும் (i) அந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எந்தவொரு உத்தரவு, பிரகடனம், அறிவிப்பு, ஒழுங்குமுறை அல்லது விதி ஆகியவை பாராளுமன்றத்தின் முன்வைகக்கப்பட வேண்டும் அல்லது (ii) பாராளுமன்றத்தால் அத்தகைய உத்தரவு, பிரகடனம், அறிவிப்பு, ஒழுங்குமுறை அல்லது விதி இரத்து செய்ய அல்லது ஒப்புதல் பெறப்படல் வேண்டும்.

எனவே மாகாண சபைகள் தமக்குரிய காணி அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமாயின் ஒன்றில் நியதிச் சட்டத்தை உருவாக்க வேண்டும் அல்லது மாகாண சபைகள் (பின்விளைவு ஏற்பாடுகள்) சட்டத்தைப் பயன்படுத்த மாகாண நிரல் (நிரல்I) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்திலும் உத்தரவு (Order), பிரகடனம் (Proclamation), அறிவிப்பு (Notification), ஒழுங்குமுறை (regulation) அல்லது விதிமுறைகளைச் (rule) செய்ய அனுமதி பெறல் வேண்டும்.

## மாகாண சபைகளின் காணி அதிகாரங்களை குறை மதிப்பிற்கு உட்படுத்த பயன்படும் நடை முறையில் இருக்கும் சில மத்திய அரசின் அரச காணிச் சட்டங்கள்

இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்கள் காணி சம்பந்தமான பாராளுமன்றச் சட்டங்களைப் பயன்படுத்துகின்றன, அவற்றில் பெரும்பாலானவை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அமல்படுத்தப்படுவதற்கு முன்னர் இயற்றப்பட்டவை. இச் சட்டங்களின் பிரிவுகளின்படி ஒரு மாகாணத்தில் உள்ள அரச காணிகளைப் பயன்படுத்தும் போதோ அல்லது வேறு தேவைக்கு எடுக்கும் போதோ அதில் மாகாண சபைகள் தலையிடமுடியும் என்றோ அல்லது அத்திணைக்களங்கள் மாகாண சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றோ கூறப்படாத காரணத்தால் அத் திணைக்களங்கள் தன்னிச்சையாகச் செயல்படுகின்றன. இப் பிரச்சினைத் தீர்ப்பதற்கு அச் சட்டங்கள் திருத்தப்படவேண்டும் அல்லது மாகாண சபைகளால் நியதிச்சட்டங்கள் இயற்றப்படவேண்டும். இவைகளைச் செய்வதற்கு மத்திய அரசு இடங்கொடுக்கப் போவதுமில்லை.

**13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் இயற்றப்பட்ட காணி சம்பந்தமான பல சட்டங்கள் மாகாண சபைகளின் காணி அதிகாரங்களை குறை மதிப்பிற்கு உட்படுத்தி தன்னிச்சையாகச் செயற்படுகின்றன.**

13 ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் இயற்றப்பட்ட (சர்ச்சைகளை ஏற்படுத்தும்) காணி சம்பந்தமான சட்டங்களில் சில பின்வருவனவாகும்.

1) 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொன்மைக் கட்டளைச்சட்டம்.

2) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபைச்சட்டம்

3) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகாரசபை (திருத்த) ச்சட்டம்.

4) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரச் சபை (திருத்த)ச்சட்டம். மற்றும் 1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராம திட்டமிடல் கட்டளைச் சட்டம் 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க திருத்தச்சட்டத்தால் திருத்தப்பட்டது.

5) 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இல்க்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவுகளைத்தக்க வைத்துக் கொள்ளும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச்சட்டம்.

இச் சட்டங்கள் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம் 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொன்மைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் காணி சம்பந்தமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள மாகாண சபைகளுக்கான பட்டியலின் (விடயம் இல 25) பிரகாரம் தொல்லியல் சம்பந்தமான ஓரளவு அதிகாரங்கள் மாகாண சபைக்கு உள்ளது. ஆனால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னாங்கள் மற்றும் இடங்கள் மீது மத்திய அரசாங்கத்துக்கே அதிகாரம் உண்டு. மத்திய அரசின் தொல்பொருளியல் திணைக்களம் கட்டளைச் சட்டங்களின் மூலம் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கின்றது.

**13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள மாகாண சபைகளுக்கான பட்டியலின் (விடயம் இல 25) பிரகாரம் தொல்லியல் சம்பந்தமான ஓரளவு அதிகாரங்கள் மாகாண சபைக்கு உள்ளது. ஆனால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னாங்கள் மற்றும் இடங்கள் மீது மத்திய அரசாங்கத்துக்கே அதிகாரம் உண்டு. இதனால் மத்திய அரசின் தொல்பொருளியல் திணைக்களம் கட்டளைச் சட்டங்களின் மூலம் மாகாண சபைகளின் ஆலோசனைகள் இன்றி தன்னிச்சையாகச் செயற்படுகின்றன.**

1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொன்மைக்கட்டளைச் சட்டத்தின் (Antiquities Ordinance) நோக்கங்களுக்காக இக் கட்டளைச்சட்டத்தின் 16, 17, 18 மற்றும் 19 பிரிவுகளின் அடிப்படையில் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் தொல்பொருள் நினைவுச் சின்னங்களை அறிவிக்க வேண்டும்.

100 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்று மற்றும் தொல்பொருள் மதிப்பின் பண்டைய கட்டுமானங்கள் 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் ஆண்டு தொன்மைக் கட்டளை (திருத்த) சட்டத்தின் சட்ட விதிகளின் படி தொல்பொருள் நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்படும்.

அரச காணிகளில் அமைந்துள்ள பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் அரச காணிகளில் அல்லது வேறு எந்த காணியிலும் வளரும் பண்டைய மரங்கள் தொன்மைக் கட்டளைச் சட்டத்தில் 16 மற்றும் 17 பிரிவுகளில் அடிப்படையில் அவற்றைப் பாதுகாப்பதற்காக பண்டைய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்படும்.

தனியார் காணியில் அமைந்துள்ள பண்டைய நினைவுச்சின்னாங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 இன் அடிப்படையில் ஆட்சேபனைகளுக்கு அழைப்பு விடுத்து அது தீர்மானிக்கப்பட்டு அதன் பின்னர் பிரிவு 18 இன் கீழ் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்படும்.

மேற்கூறிய முறையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து எந்தவொரு பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னத்தில் எந்தவொரு மறுசீரமைப்பு, பழுதுபார்ப்பு அல்லது சேர்த்தல் பணிக்களைத் தொடங்க அல்லது மேற்கொள்ள தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி அவசியம் என்பதை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21 வலியுறுத்துகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பு- தமிழரின் பண்பாட்டுப் பண்டிகை

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!**
**கூழப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**



ஆடிப்பிறப்பு என்பது தமிழ் ஆடி மாதத்தின் ஆரம்ப நாள். ஒரு வருடத்தின் நடுப்பகுதியில் வரும் இந்தத் தொடக்க நாளை ஒற்றுமையுடனும், சந்தோஷமாகவும் வரவேற்கவே "ஆடிக்கூழ்" நிகழ்வு தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

இந்தக் கொண்டாட்டமானது, ஒரு பண்பாட்டுடன், நம்பிக்கையாக, சடங்காக சந்ததி வழியாக கடத்தப்படுகிறது. ஏன் ஆடி மாதத்தை வரவேற்க வேண்டும்? ஆடி மாதத்திலிருந்து குளிர்காலம் ஆரம்பிப்பதால் மாறா காலநிலை இருந்த காலகட்டத்தில் ஆடிப்பெருக்கு எனும் மழைக்காலத்தில் மழை சிலவாரங்கள் பெய்யும். இப்போதெல்லாம் அவ்வாறில்லை. பருவநிலை மாற்றம் ஆடிப்பெருக்கை மாற்றம் செய்து விட்டது.

ஆடிப்பெருக்கு வந்ததும் உழவர்கள் வயல்வேலைகளை ஆரம்பிப்பார்கள். அடுத்து வரும் ஆறு மாதங்களும் ஓய்வற்ற கடின உழைப்பை வழங்க வேண்டிய மாதங்களாகும். எனவே அந்த ஆறு மாதங்களுக்கும் வரப்போகின்ற அழகிய குளிர்மையான காலத்தை வரவேற்கவே ஆடித் திருநாளைக் கொண்டாடுகின்றோம்.

நெல், பயறு, உழுந்து ஆகிய தானியங்களோடு கருப்பட்டியும் சேர்த்து தயாரித்த கூழ் மற்றும் கொழுக்கட்டையை உணவுப் பண்டங்கள் தயாரித்து உறவினர், அயலவர்களிடையே பகிர்ந்து மகிழ்ந்திருப்பது இந்நாளின் முக்கிய சிறப்பம்சமாகும். தமிழில் "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலும் பிரபல்யமானது. தமிழர் நாம் கல், மலை, மரம், சூரியனையும் மட்டும் வழிபட்டு வரவில்லை. இதேபோல காலநிலையையும் வணங்கியிருக்கிறோம்.

அதனை வரவேற்று விமரிசையாக விழாவும் எடுத்திருக்கிறோம். உலகின் சிறப்பான பண்பாட்டுக்குரியவர்கள் தமிழர்கள் நாம் தான் என்பதை அழகாக எடுத்துக்காட்ட இதைவிட வேறு உதாரணம் தேவை இல்லை. கடவுள் பின்னணியில் இருக்க வேண்டும் என்பதற்காகவே, இயற்கையோடு கடவுள்கள் பிணைக்கப்பட்டிருக்கின்றனர்.

அதை விஞ்ஞான பூர்வமாகப் பார்த்தால், சமூகம் இணைந்து வருடமொன்றின் இரண்டாம் கட்டமாகிய காலநிலைக் காலத்தைச் சேர்ந்து வரவேற்கிறது. பொருளாதார ரீதியில் நோக்கினால் சமூகத்திற்கு வளம் தரப்போகிற காலகட்டத்திற்கு மதிப்பளிக்கிற சடங்குதான் நடக்கிறது.

இன்றைய காலத்தில் இவ்வாறான சடங்குகளை நாம் பின்பற்றுவதில்லை. நம் சமூகம் விவசாயத்திலிருந்து வெளிவந்து, விவசாயத்திற்கும் மக்களுக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துவிட்டமையினாலும் இவற்றை மறந்து விட்டோம்.

ஆனால் இதுபோன்ற சம்பிரதாய பின்பற்றல்களில்தான் இன உணர்வு மனதில் வேரோடுகிறது. இன உணர்வின் மீதான அதீத பற்றுதலே தேசிய உணர்வாக மாற்றம் அடைகிறது. ஒற்றுமையான தேசிய உணர்வுதான் தேசத்தை உருவாக்கும். எனவே இவற்றை பின்பற்றாமல் இன உணர்வை மீள உருவாக்க இயலாது.

இனத்திற்கான எண்ணத்தைப் புதுப்பிக்கஃ முடியாது. எனவே நம் பண்பாட்டை ஆழமாக, அழகாக புரிந்து நடந்து கொள்வோம்.

எமது பண்பாட்டை மீளக் கட்டியெழுப்பும் இந்த மாதிரியான சடங்குகளை மீளமீள நிகழ்த்தி நம்மையும், நம் பண்பாடுகளையும் புதுப்பித்துக்கொள்வோம்.

# பட்டப்படிப்பின் பின் சுயதொழில் இதுவே எனது எதிர்பார்ப்பு

## என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

கல்வி சீர்திருத்தங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் தற்காலத்திற்கு பொருத்தமான ஒரு கல்வி முறையை முன்வைக்க வேண்டுமே அன்றி, அரசியல் நோக்கங்களை ஆதரிக்கக் கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெருநகரப் பல்கலைக் கழக திட்டத்திற்கான உத்தியோகபூர்வ இணையத் தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றும் பொதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் பெரும்பாலானோர், அரச தொழிலை எதிர்பார்ப்பதாகவும் தொழில் வழங்குவதை விட, தொழிலை உருவாக்கும் பொருளாதார பின்புலத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டையே அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்திற்கு நேரடியாக தொடர்புபடும் அல்லது சுயதொழிலில் ஈடுபடக்கூடிய அறிவுள்ள நபரை பட்டப்படிப்பின் பின் உருவாக்குவதே தமது எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

100 வீதம் அரச பல்கலைக்கழகங்களை நடத்த முடியாது என கூறியுள்ள ஜனாதிபதி, வர்த்தக நோக்குடன் மாத்திரம் செயற்படுத்தப்படும் பல்கலைக்கழகங்களுக்கு தாம் எதிர்ப்பை வெளியிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக் கழகங்களில் ஈட்டும் வருமானத்தை கல்வி நடவடிக் கைகளின் மேம்பாட்டிற்காக ஒதுக்க வேண்டும்.

இதேவேளை, பெருநகர பல்கலைக்கழகத்திற்கான முதலாவது திட்டத்தை கேகாலை - பின்னவல பகுதியில் எதிர்வரும் வாரங்களில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (நி-5)

# திடீரென தாழிறங்கிய நிலம் வெளியேறிய கிராம மக்கள்

(ஹற்றன்)

கினிகத்ஹேன - ரஞ்சுலாவ பிரதேசத்திலுள்ள சந்த சிரிகம கிராமத்தில் திடீரென நிலம் தாழிறங்கியுள்ளதால் 13 குடும்பங்களை சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.


மண்சரிவு அபாயம் காரணமாக மக்கள் குடியிருப்புக்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்தது.

இந்த கிராமத்தை அண்மித்த பகுதிகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மண்சரிவு ஏற்பட்டிருந்த நிலையில், மீண்டும் அவ்வாறான பாதிப்புகள் ஏற்படுமா? என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (நி-5)

## செய்தித்துளிகள்

# மருதானை பொலிஸ் நிலையத்தில் தீ

(கொழும்பு)



மருதானை பொலிஸ் நிலைய்த்தின் இரண்டாவது மாடியில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் தீயணைப்பு படையினரின் விரைவான நடவடிக்கை காரணமாக அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் இது தொடர்பான விசாரணைகள் நடந்து வருகின்றன. (நி-5)

# சுகாதார விதி மீறல் மேலும் 157 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 157 பேர், கடந்த 24 மணிநேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனை தெரிவித்துள்ளார்.


கடந்த ஆண்டு ஒக்டோபர் 30 முதல் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதானவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 187 ஆக அதிகரித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நரி ருசித்த அப்பம்



மீனாட்சி பாட்டி வயலூரில் இட்லி கடை வைத்து நடத்தி வந்தார். அவர் சமைக்கும் பலகாரங்கள் மிகவும் சுவையாக இருக்கும். விலையும் குறைவாக இருக்கும்.

அதனால் பக்கத்து ஊரில் இருந்து கூட இட்லி வாங்கிச் செல்வார்கள். கடையில் எப்பொழுதும் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும்.

பாட்டிக்கு அடுப்பு எரிக்க, சுள்ளிகளைக் கொண்டுவந்து தருவது அவரது பேரன் குருபரன்தான். ஆனால் அவர் காய்ச் சலில் படுத்து விட்டதால், இன்று பாட்டியே காட்டுக்குச் செல்ல வேண்டியதாகி விட்டது.

மதியச் சாப்பாட்டுக்கு அப்பமும் தேங்காய்ப்பாலும் எடுத்துக் கொண்டார்.

ஒரு மரத்தில் தூக்குச் சட்டியை வைத்துவிட்டு, சுள்ளிகளை எடுக்க ஆரம்பித்தார் பாட்டி. அருகில் இருந்த புதருக்குள் குள்ளநரி ஒன்று பசியோடு இருந்தது.


வயதாகிவிட்டதால், முன்புபோல் வேட்டையாட முடியவில்லை. பாட்டியின் அப்பம், தேங்காய்ப் பால் வாசம் அதன் மூக்கைத் துளைத்தது. சத்தம் இல்லாமல், தூக்குச் சட்டியை எடுத்துக்கொண்டு புதருக்குள் மறைந்து கொண்டது.

ஒரு கட்டு சுள்ளிகளைச் சேகரித்த பாட்டி, சாப்பிட வந்தார். தூக்குச் சட்டியைத் தேடினார்.

"ஐயோ" தூக்குச் சட்டியைக் காணோமே? யார் எடுத்திருப்பாங்க? ஏதாவது விலங்கு தூக்கிக்கொண்டு போயிருக்கலாம். இன்னிக்குப் பட்டினிதான்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, மீண்டும் சுள்ளிகளைச் சேகரிக்க ஆரம்பித்தார் பாட்டி.

(தொடரும்)

# மகாபாரதம்




வாள் கொண்டு ஒருவர் கையை அறுத்தாலும் சரி, சந்தனத்தால் ஒருவர் அபிசேகம் செய்தாலும் சரி இருவருக்குமே தீங்கையோ, நன்மையையோ நினைக்க மாட்டேன்.

இவ்வளவு நாள் இந்த புத்தி இல்லாமல் தான் சகோதரர்களைக் கொன்றேன்.

பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், வேதனை இவைகளால் பீடிக்கப்படும் மனித வாழ்க்கையில் ஒரு பயனும் இல்லை.

நிலையில்லா உலகில் தோன்றும் அற்ப ஆசைகளால் ஒரு அரசன் மற்ற அரசனைக் கொல்கிறான்.

இவ்வளவு நாட்கள் அறிவு தெளிவற்றுக் கிடந்த நான் இப்போது தெளிந்த ஞானத்துடன் ஒரு முடிவிற்கு வந்து விட்டேன். என்றும் நிலைத்து நிற்கக்கூடிய முக்தியை அடையத் துணிந்து விட்டேன்" என்றார்.

**பீமன் கூறியது**

பீமன் தருமனைப் பார்த்து "நீங்கள் உண்மையை சரியாக புரிந்து கொள்ளவில்லை. ராஜ தர்மத்தையே கொச்சைப்படுத்துகிறீர். ராஜ தருமத்தில் உங்களுக்கு ஏன் அருவெறுப்பு? இப்படி நீங்கள் சொல்வீர்கள் எனத் தெரிந்திருந்தால் நாங்கள் போர்க்கருவிகளையே எடுத்திருக்க மாட்டோம். யாரையும் கொன்றிருக்கமாட்டோம்.

இந்தப் போரே நடந்திராது. காலமெல்லாம் நாம் பிச்சை எடுத்திருப்போம்.

இவ்வுலகு வலிமையுள்ளவர்களுக்கே சொந்தம் என மேலோர் கூறியுள்ளனர். நம் பகைவர்களைத் தரும நெறிப்படி கொன்றோம். வெற்றி பெற்ற நாட்டை அனுபவித்தல்தான் முறை.

பெரிய மரத்தில் ஏறி அரும்பாடுபட்டு கொணர்ந்த தேனைப் பருகாது மரணம்அடைவதுபோல இருக்கிறது உமது செயல்.

பகைவனைக்கொன்று விட்டு தற்கொலை செய்துகொள்வதுபோல இருக்கிறது உங்கள் செயல். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மன்னிக்கக்கூடிய குற்றங்களாக நான் காண்பவை இரண்டுதான். கொடுமை, அற்பத்தனம். – அறிஞர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பால் தந்த பசுக்கள் பால் ஊற்ற வைக்கலாமோ!

*போகாதே போகாதே என் கணவா! பொல்லாத சொற்பனம் நானும் கண்டேன் பட்டத்து யானை மடியக் கண்டேன். வாழை மரங்கள் முறியக் கண்டேன்...*

இது கவியரசு கண்ணதாசனின் பாடல்.

கனவு பற்றி ஆராய்ந்த உளவியலாளர்கள் எதிர்காலத்தில் நடக்கக்கூடியவை கனவின் மூலமாக வெளிப்படலாம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆக, கவியரசு கண்ணதாசனின் மேற்குறித்த சினிமாப் பாடல் உளவியல் சார்ந்த உண்மைப் பொருளை வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

பொதுவில் அறிகுறிகள், வீடுகளில் நடக்கின்ற வித்தியாசமான சம்பவங்கள், கனவுகள் என்பவற்றுக்கு அர்த்தப்பாடுகள் இருப்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்தமையால்தான் இன்றுவரை பஞ்சாங்கமும் பல்லி சொற்பலனும் நம் வாழ்வியலோடு ஒன்றித்துள்ளன.

ஆக, சில விசேட சம்பவங்கள் நன்மையை அல்லது பாதகத்தை சுட்டி நிற்பதாக நம் மக்கள் சமூகம் நம்புவதை எவரும் நிராகரித்துவிட முடியாது.

இவை ஒருபுறமிருக்க, கொரோனாத் தொற்றுக்குப் பின்பு முரண்பாடான பல சம்பவங்கள் நம் மத்தியில் நிதர்சனமாகி வருவதை நாம் அவதானிக்க முடியும்.

இதில் முக்கியமானது வீடுகளில், தோட்டங்களில், வயல் நிலங்களில், மேய்ச்சல் தரைகளில் கட்டி வளர்க்கப்பட்ட பசுக்கள் எல்லாம் இப்போது வீதிக்கு வந்துள்ளதை பொதுமக்கள் அவதானித்திருப்பர்.

அதிலும் பத்து பதினைந்து லீற்றர் பாலைத் தரக்கூடிய நல்லினப் பசுக்கள்கூட வீதிக்கு வந்துள்ளமைதான் இங்கு ஆச்சரியமான விடயம்.

இவ்வாறு நல்லினப் பசுக்களைக்கூட அவிழ்த்து விடுகின்ற நிலைமைக்கு நம் மக்கள் வந்தமைக்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்தால், கொரோனாக் கட்டுப்பாட்டுக்காக நாடு முடங்கியதாலும் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டதாலும் பால் உற்பத்தியை சந்தைப்படுத்த முடியாமல் போயிற்று.

இதனால் மாடு வளர்ப்பவர்கள் பெருநட்டமடைந்தனர்.

இதற்கு மேலாக, கால்நடைத் தீவனத்தின் விலை உச்சமடைய, நல்லினப் பசுக்களை அவிழ்த்து விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றாயிற்று.

இதன் காரணமாக இப்போது யாழ்.குடாநாடு உட்பட வடபகுதி முழுவதிலும் மாடுகள் வீதிகளில் நடமாடுகின்றன.

இவ்வாறு மாடுகள் வீதிகளில் நடமாடுவதால், திடீர் விபத்துக்கள் ஏற்பட்டு அருமந்த மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இந்த நிலைமை சமாளிக்கப்பட வேண்டுமாயின் மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய வடக்கு மாகாண நிர்வாகம் முன்வர வேண்டும்.

இல்லையேல் வீதியெங்கும் மாடுகள் குறுக்கும்நெடுக்குமாகச் செல்ல, விபத்துக்கள் மலிந்து போவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

## தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் உட்பட 16 பேரும் விடுதலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் 15 பேர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறி பாராளுமன்ற சுற்றுவட்டம் அருகே போராட்டம் நடத்தியதற்காக 16 பேரும் கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பின்னர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களது விடுதலையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## விசுவமடு பாரதி மகா வித்தியில் 24 மாணவர்களுக்கு குளவிக் கொட்டு

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தில் கற்றலுக்காக சென்ற மாணவர்கள் 24 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாரதி மகாவித்தியாலயத்தில் கற்றல் மத்திய நிலையத்தில் நேற்று காலை 8.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட விசுவமடு பாரதி மகாவித்தியாலத்தின் கற்றல் மத்திய நிலையத்தில் கற்றல் செயற்பாட்டிற்காக சென்ற மாணவர்கள் மீது குளவி கொட்டியுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட்ட 24 பாடசாலை மாணவர்கள் மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 8 பேர் மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் 05 மாணவர்களும் 19 மாணவிகளும் அடங்குகின்றார்கள். குறித்த கிராமங்களில் தொலைத் தொடர்பு வசதிகள் (சிக்னல்) இல்லாத நிலையில் மாணவர்கள் இணையவழி கல்வியினை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக கற்றல் மத்திய நிலையமாக குறித்த நிலையம் இயங்கிய வேளையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (ம-3,281)

## பருத்தித்துறையில் 6 வயது சிறுமிக்கு கொரோனா உறுதி

பருத்தித்துறையில் 6 வயது சிறுமி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து 6 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில் இவ்வாறு 6 வயது சிறுமிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள 6வயது சிறுமிக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 18 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அச்சுவேலி நகரம், டச்சுவீதி, மருத்துவமனை வீதி, இடைக்காடு, கதிரிப்பாய், மருதடி சந்தி, செல்வ விநாயகபுரம், வயாவிளான், சென். ஜேம்ஸ் சந்தி, பலாலி தெற்கு, தம்பாலை, தோப்பு, வளலாய் விமான நிலையச்சந்தி, விஜிதாமில், இடும்பன், நிச்சாமம், வைரவர் கோவிலடி, சுழிபுரம், திருமணமண்டலம் பிரான்பற்று ஆகிய இடங்களிலும் 8.30 மணியிலிருந்து 5 மணி வரை கொழும்புத்துறை, நெடுங்குளம், மணியந்தோட்டம், புங்கன்குளம், உதயபுரம், மணியந்தோட்டம் ஐஸ் தொழிற் சாலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 4ஆவது மைல்கல் பூநகரி, அரசபுரம், [illegible] காய்த்தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன், நல்லூர் பூநகரி, நேரடம்பன், நெற்பிளவு, ஓவசியர் கடைச்சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித் திட்டம், பரமன்கிராய், பரந்தன் நகரம் செம்மண்குன்று, சின்னபல்லவராயன்கட்டு, தம்பிராய், தரணிக் குடியிருப்பு, வாடியடி பூநகரி, வெட்டுக் காடு (கௌதாரிமுனை), வீரையடி, விராசியோடை (கௌதாரி முனை), 66 ஆம் பிரிவு இராணுவமுகாம் பூநகரி, அரசபுரம் இராணுவ முகாம், செல்லையாதீவு பிரதேச செயலகம் பூநகரி, பரந்தன் தொலைத்தொடர்பு நிலையம், விளாஓடை இராணுவமுகாம், 66 ஆம் பிரிவு இராணுவப் பயிற்சி பள்ளி அரசபுரம், சுகந்தன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சமணங்குளத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, [illegible] ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரி வளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர்வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறைவேட் லிமிட்டட் (கடல் உணவுக் களஞ்சியம்) பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலை மன்னார் கடற்படைமுகாம், ரைமக்ஸ் ஆடை, வங்காலைப்பாடு சென்ட்லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர்வழங்கல்-தோட்டக்காடு, இளைஞர் படை பயிற்சி மையம் கார்கில்ஸ் பூட் சிட்டி, மன்னார், இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், தள்ளாடி டயலொக், நடுக்குடா, பேசாலை- ஐஸ் தொழிற்சாலை, கொன்வென்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மூர் வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர் சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, படப்பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப் பண்ணை, பாவிலுப் பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, பகையிரத நிலையம்-சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவமுகாம், மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்பு திட்டம், மன்னார் யுசி மைதானம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2021-16.08.2021

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும்!



**எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் சமாளிக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் சூரியன் விரய ஸ்தானத்தில் இருக்கின்றார். அதேநேரத்தில் உங்கள் இராசியை பஞ்சம- அஷ்டமாதிபதியான குரு பகவான் வக்கிரம் பெற்று பார்க்கின்றார். எனவே நல்ல பலன்கள் யாவும் இல்லம் தேடி வரப்போகின்றது. குறிப்பாக சுபகாரியங்கள் கைகூடும். துணிந்து முடிவெடுத்து தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு அதிபதியான சனிபகவான், அங்கேயே வக்கிரம் பெற்றிருக்கின்றார். மறைவிடத்திற்கு அதிபதிகள் வக்கிரம் பெறும்பொழுது கூடுதல் நன்மைகள் கிடைக்கும். நல்ல திருப்பங்கள் ஏற்படப் போகின்றது. தொழில், உத்தியோகம் போன்றவற்றில் வளர்ச்சியும், வருமானமும் ஏற்படும். தடைப்பட்டு வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும்.

சப்தம ஸ்தானத்தில் குரு பகவான் வக்கிரம் பெற்றிருக்கின்றார். உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியான குரு வக்கிரம் பெறுவதால், பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். கல்விக்காக கொஞ்சம் செலவிடுவீர்கள். இல்லத்தில் சுபகாரியம் நடத்தும் யோகம் உண்டு. 4 இல் கேதுவும், 10 இல் ராகுவும் இருப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சிகளில் ஆதாயம் கிடைக்காது. அனைவரையும் அனுசரித்துச் செல்லுங்கள். அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை, தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

**சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்**

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உங்கள். இராசியிலேயே சஞ்சரிப்பது சிறப்பான யோகத்தை வழங்கும். பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். வழக்குகள்

சாதகமாகும். ஓகஸ்ட் 12 ஆம் திகதி சுக்கிரன் நீச்சம் பெறும்பொழுது, தொழில் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை ஏற்படலாம்.




**கடக புதன் சஞ்சாரம்**

ஜூலை 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு தன - லாபாதிபதியான புதன் விரய ஸ்தானத்திற்கு வரும்பொழுது செலவு கூடும். குடும்பச்சுமை அதிகரிக்கும். ஒரு சில காரியங்களை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும். இருப்பினும் குரு பார்வை உங்கள் இராசியில் பதிவதால் கவலைப்படத் தேவையில்லை.

காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கும்.

**சிம்ம செவ்வாய் சஞ்சாரம்**

ஜூலை 21 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு செவ்வாய் வருகிறார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய், இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது நீங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும். வீடு கட்டும் முயற்சியில் வெற்றி உண்டு. மனைவி-மக்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கி சேர்க்க முன் வருவீர்கள். அரசு பணிக்கு ஏற்பாடு செய்திருந்தால் அது கிடைக்கும். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி உண்டு. இம் மாதம் சூரிய வழிபாடு சுகங்களை வழங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மணிவிழா போன்ற மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வழி பிறக்கும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்தும் அனுகூலத் தகவல் வந்து சேரலாம். பிரதோஷம் அன்று சிவ-நந்தியை வழிபடுங்கள்.

## சுபகாரியங்களை நடத்துவதில் இருந்த தடைகள் அகலும்!



**பலமுறை யோசித்த பின்னரே காரியங்களில் ஈடுபடும் கன்னி இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, உங்கள் இராசிநாதன் புதன், தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்தில் பலம் பெற்று சஞ்சரிக்கின்றார். குருவின் பார்வையும் அவர் மீது பதிகின்றது. எனவே இம் மாதம் தடைகள் தானாக விலகும். தனித்து இயங்கும் ஆற்றல் பிறக்கும். உத்தியோகம், தொழிலில் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

மாதத் தொடக்கத்தில் குரு வக்கிரம் பெற்றிருப்பது நன்மைதான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான குரு வக்கிரம் பெறும்பொழுது, மிகுந்த நன்மைகளையே வழங்கும். பொருளாதார வளர்ச்சி திருப்தி தரும். புகழ் மிக்கவர்கள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். சுபகாரியங்களை நடத்துவதில் இருந்த தடைகள் அகலும்.

பஞ்சம ஸ்தானத்தில் சனி பகவான் வக்கிரம் பெற்றிருக்கின்றார். லாப ஸ்தானத்தில் விரயாதிபதி சூரியனோடு, செவ்வாய், சுக்கிரன் ஆகிய கிரகங்களும் இணைந்திருக்கின்றன. குரு பார்வை உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே எந்தக் காரியத்தை செய்ய நினைத்தாலும் உடனடியாக செய்ய இயலும். அதற்குரிய தொகையும் தேவைப்படும் பொழுது கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், புதிய பணியில் சேர முயற்சிப்பர்.

**சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்**

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், ஜூலை 18 ஆம் திகதி விரய ஸ்தானமான சிம்மத்திற்கு வருகிறார். எனவே தனவிரயம் உண்டு. இதுபோன்ற காலங்களில் இல்லம் கட்டிக் குடியேறுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம். ஓகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசியில் சுக்கிரன் நீச்சம் பெறப்போகின்றார். தனாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும். கடன் சுமை கூடும்.

**கடக புதன் சஞ்சாரம்**

ஜூலை 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் தொழில் ஸ்தானா




திபதியாகவும் விளங்கும் புதன், லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது மிகுந்த நற்பலன்களைக் கொடுப்பார். குறிப்பாக வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த தகவல் அனுகூலமானதாக கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழிலை விரிவு செய்ய, கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். உறவினர்கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

**சிம்ம செவ்வாய் சஞ்சாரம்**

ஜூலை 21 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். இந்த மாற்றத்தால் 'விபரீத இராஜயோகம்' செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். செய்யும் புது முயற்சிகளில் இருந்த குறுக்கீடுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் புதிய வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அதுவும் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் விஷ்ணுவை வழிபடுவதன் மூலம் புதிய பாதை புலப்படும்.

**பெண்களுக்கான பலன்கள்**

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பாதியில் நின்ற கட்டடப் பணி மீதியும் தொடர வழிபிறக்கும்.

கணவன் - மனைவிக்குள் பாசம் கூடும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். பணிபுரியும் பெண்கள் தங்கள் முன்னேற்றத்தைப் பற்றி முன்கூட்டியே யாரிடமும் சொல்ல வேண்டாம். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +1,446...

சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள பிந்திய அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 281,989 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 41 பேர்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் 18 பேரும் ஆண்கள் 23 பேரும் என 41 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3,702 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மனைவி வைத்...

ருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் வீட்டின் உரிமையாளரான குஞ்சுமோகன் அசோகன் (வயது - 61) என்பவரே இவ்வாறு சடலமாக நேற்று காலை மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் துர்நாற்றம் வீசுவது தொடர்பாக அயலவர்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலமாக அடையாளம் காணப்பட்டவரின் மனைவி, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பிள்ளைகள் தொழில் நிமிர்த்தம் வேறு பகுதியில் வாழ்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது. (ம-3,281)

## 9 மாதக்...

நோய்த் தொற்றுள்ளமை சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது .

9 மாதக் கைக்குழந்தை திடீர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் சங்கானை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது.

எனினும் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளது .

முதலாவது பிசிஆர் பரிசோதனையில் மூலக்கூறுகள் போதாது என திருப்பப்பட்டது. மீண்டும் எடுக்கப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் குழந்தைக்கு கோவிட் -19 நோய்த்தொற்று இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த குழந்தைக்கு கோவிட் - 19 நோய்த்தொற்று உள்ளமை முதன்முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது . (ம-3,33)

## 2 வாரங்களில்...

இதனைத் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால் மேலும் நோயாளிகள் அடையாளம் காணப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். டெல்டா வைரஸ் நாட்டின் ஏனைய பகுதிகளிற்கு பரவும் என அவர் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இலங்கையில் இறப்பு வீதம் இந்தியா போன்ற நாடுகளிற்கு சமமாக காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தொடர்ந்தும் சமூக விலக்கலை பின்பற்ற வேண்டும், முகக் கவசங்களை அணியவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசியின் பலாபலன்கள் உடனடியாக தென்படாது சில மாதங்கள் எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தலைமன்னார்...

நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் தலைமன்னார் கடற்பரப்பின் 5ஆவது தீடைப் பகுதியில் மிகவும் சிதைவடைந்த நிலையில் சடலம் ஒன்றை அடையாளம் கண்டுள்ளனர்.

குறித்த சடலம் தொடர்பாக கடற்படையினர் தலைமன்னார் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

தலைமன்னார் பொலிஸார் குறித்த தீடைப்பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை பார்வையிட்டதோடு, மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று குறித்த சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் தற்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,285)

## பருத்தித்துறை...

வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாவலடியில் நேற்று 30 பேரிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 7 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நான்கு நாட்களில் 95 பேருக்கு கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எழுமாற்று பரிசோதனையில் அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவையே முடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேலும் பருத்தித்துறை நகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையில் மேலும் 14 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களில் பருத்தித்துறை நகர் மற்றும் முதலாம் இரண்டாம் மூன்றாம் குறுக்குத் தெரு பகுதிகளில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில், மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் முடிவுகள் நேற்று வெள்ளிக்கிழமை வெளியாகின.

அந்த முடிவுகளின்படி 14 பேருக்கு தொற்று ஏற்பட்டு உள்ளது. இதில் பருத்தித்துறை நகர் பகுதியில் வர்த்தக நிலையம் நடத்தும் 7 பேருக்கும் வங்கி ஒன்றின் முகாமையாளர் மற்றும் பணியாளருக்கும், பருத்தித்துறை நகர சபை ஊழியர்கள் இருவர், பொதுமக்கள் மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,33,60)

## மாகாணங்...

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கோவிட் காரணமாக தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகள் அண்மையில் அத்தியாவசிய தேவைகளின் நிமிர்த்தம் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுப்பதற்காக கடந்த புதன்கிழமை முதல் பொதுப் போக்குவரத்து சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கட்டு...

இதன்படி இப்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணத் தடையை மேலும் சில வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும்தொற்றுப் பரவல் அடையாளம் காணப்படும் இடங்களை உடனடியாக முடக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (ம-3)

# போதைப் பொருளுடன் மட்டக்களப்பில் நால்வர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை கறுவாக்கேணி வீதி செம்மணோடையில் வைத்து ஐஸ் மற்றும் கேரளா கஞ்சாவுடன் நான்கு பேர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டனர். (ம-3)

## 6 தொற்றாளர்...

தொற்று உள்ளமை நேற்றைய பரிசோதனைகளில் கண்டறியப்பட்ட நிலையில் அவர்களில் 6 பேர் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் புத்தளம் மற்றும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் என்பதால் பொலிஸார் ஊடாக அவர்களைக் கைது செய்ய சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அவர்கள் 6 பேரும் பிசிஆர் மாதிரிகளை வழங்கிய நிலையில் தமது சொந்த ஊரான புத்தளம் மற்றும் காத்தான்குடிக்கு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுடன் பணியாற்றியவர்களை சுயதனிமைப்படுத்தச் சென்ற போது அவர்களும் தலைமறைவாகியுள்ளதால் பொலிஸாரின் உதவியை சுகாதாரத் துறையினர் நாடியுள்ளனர்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றத்துக்கு குறைந்தது ஒரு ஆண்டு சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,33)


மெகா பவர்
திகதி 16/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0855
A 26 09 22 34 42

மஹஜன சம்பத
திகதி 2021/07/16
சீட்டிழுப்பு இலக்கம் 4507
L 1 5 0 7 2 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2802
வெற்றி இலக்கங்கள்
Z 01 28 51 62
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.07.16
சீட்டிழுப்பு இலக்கம் - 537
V 09 12 21 23
வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1310
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 16.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ 50,263,094
வெற்றி இலக்கங்கள் 05 15 64 70 X
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3645
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 16.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,461,259
வெற்றி இலக்கங்கள் 08 12 63 71 C
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 4,874,631/=
திகதி: 16.07.2021
வெற்றி வாரம்: 3196
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 05 27 41 46
கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,285,380/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1484
நிறம் இளம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 16/07/2021
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 01 12 29 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,885,308/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த தொற்றாளர்கள் கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதி முடக்கம்

(கிளிநொச்சி)

அதிகரித்த கொரோனாத் தொற்றாளர்களையடுத்து கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதி நேற்று மாலை முதல் 14 நாட்களுக்கு முடக்கப்பட்டது என சுகாதார தரப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவிற்குட்பட்ட வட்டக்கச்சி கட்சன் வீதியில் நேற்றைய தினம் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் கடந்த 4 நாட்களில் 4 மற்றும் 6 வயதான சிறுவர் உட்பட 15 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

மேற்படி 15 பேரில் 10 பேர் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 3 பேர் நேற்று முன்தினமும் அதற்கு மூன்று தினங்கள் முன்னதாக தலா ஒவ்வொருவரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர். இந்நிலையில் குறித்த பகுதி நேற்று இரவு முதல் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் ஏறத்தாள 300 குடும்பங்களை சேர்ந்த 950 பேர் முடக்கப்பட்டுள்ளனர்.

குறித்த முழுமையான முடக்கம் 14 நாட்களுக்கு இருக்கும் எனவும், மக்கள் நடமாடுவதை தவிர்க்குமாறும், வர்த்தக செயற்பாடுகளை நிறுத்துமாறும் சுகாதார தரப்பினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை 9 முக்கிய இடங்களில் இராணுவத்தினரால் வீதி தடைகள் அமைக்கப்பட்டு கடமையில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-03,100,316)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சரத்துக்களை திருத்த நடவடிக்கை

## வெளிவிவகார அமைச்சர் தினேஸ்



(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் சில சரத்துக்களை திருத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக அமைச்சரவை இணைக் குழுவொன்றை நியமித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வெளிவிவகார அமைச்சரை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் சர்வதேசத்தில் பிழையான ஓர் கருதுகோள் பரப்பப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேசத்தில் எழுந்துள்ள மனித உரிமை மற்றும் இன நல்லிணக்கம் குறித்த பிரச்சினைகளுக்கு வெளிப்படையாக செயல்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (ம-03)

# வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை நிலையத்திற்குள்

## பியர் ரின்களுடன் புகுந்த இருவர் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை நிலையத்திற்குள் பியர் ரின்களுடன் புகுந்த இருவர் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வட்டுக்கோட்டை கொரோனா சிகிச்சை மையத்தில் பருத்தித்துறை பகுதியை சேர்ந்தவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வழங்கவென பியர் ரின்களுடன் பருத்தித்துறை வாசிகள் இருவர் சிகிச்சை நிலையத்திற்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர்.

அவர்களை அங்கிருந்தவர்கள் மடக்கி பிடித்துள்ளனர். அவர்களை பொலிசாரிடம் கையளித்த போதிலும், அவர்களுக்கு கொரோனாத் தொற்று இருக்கும் என அச்சம் காரணமாக பொலிஸார் அவர்களை கைது செய்வதற்கு ஆரம்பத்தில் பின்னடித்தனர். பின்னர் அவர்களை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளதோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ம-03,33)

# முடக்கப்பட்டிருந்த யாழ். நாரந்தனை வடக்கு நேற்று முதல் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாரந்தனை வடக்கு பகுதி நேற்று காலை 6 மணி தொடக்கம் தனிமைப்படுத்தல் முடக்கத்திலிருந்து விலக்கப்படுவதாக இராணுவ தளபதியும் தேசிய கோவிட் தடுப்பு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்திருக்கின்றார்.

அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் யாழ்.வேலணை பிரதேசத்திற்குட்பட்ட நாரந்தனை வடக்கு பகுதி முடக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று காலை 6 மணியுடன் குறித்த பகுதி முடக்கத்திலிருந்து விலக்கப்பட்டது. (ம-03)

**காணி விற்பனைக்கு**

புன்னாலைக்கட்டுவன் புத்தூர் வீதியில் 50 பரப்பு விஸ்தீரணம் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. (பலாலி விமான நிலையத்திற்கு அருகில்)

**078 928 5906** (7246)

**வேலை வாய்ப்பு** TEAM UP WITH US Inner Circle



தெற்காசியாவின் உயர்மட்ட தொலைத்தொடர்பு நிறுவனத்தில்

- அடிப்படை சம்பளத்துடன் ரூ 40,000 இற்கும் அதிக ஊதியம் (EPF/ETF).
- குறைந்தபட்ச தகைமை O/L OR A/L எதிர்பார்க்கப்படும். வவுனியா,யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்கள் பெயர், மாவட்டம்,வயது,தகைமை, தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம் போன்றவற்றை SMS OR WHATSAPP ஊடாக அனுப்புங்கள். (7250)

-076 770 7759/ WHATSAPP- 076 756 5659
No- 100/3, 3 ஆவது மாடி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (முட்டாசுக் கடைச் சந்தி)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.

1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்

( யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)

தொடர்பு நேரம் : 9.30 a.m - 5.00 p.m (7254)

**076 221 2037, 076 734 1023**
**077 064 2661**

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **கோமதி தவப்பிரகாசம்**
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி**
**அன்னலக்சுமி சரவணமுத்து**

மலர்வு : 19.05.1942
உதிர்வு : 15.07.2021

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு பாடசாலையின் சார்பில் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா / பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி. (C-2368)

**எழுதுவினைஞர் (Clerk) தேவை**

யாழ். நகரில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றிற்கு பெண் எழுதுவினைஞர் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட இந்து சமய பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு (7251)
**077 224 7781**

**வேலையாள் தேவை**

எமது நிறுவனத்திற்கு சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள வேலையாள் தேவை.
(ஆண்கள் மட்டும் ) (7249)

**071 413 9606**

**அண்ணா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2307)
070 3305500
077 888 9388

| | | | |
|---|---|---|---|
| 776,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
**UK-1000/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL (C-2308)

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org